ISSN 1703-9185

# ஆத்மஜோதி

## Arthmajothy

October - December 2014

ஜய வருட
ஐப்பசி - மார்கழி 2014
இலவச வெளியீடு
3000 பிரதிகள்



இந்து சமயத்திற்கு மாறிய ஜேர்மனி வாழ் மக்கள் சமய தீட்சை பெறும் பொழுது

# வீடு, வியாபார நிலையங்கள் வாங்க விற்க





**Siva Shanmuganathan**
Real Estate Broker
***Cell: 416-545-7482***

**Joy Selvanayagam**
Real Estate Broker
***Cell: 416-358-6928***


HOMELIFE HIGHER STANDARDS

**Homelife/Future Realty Inc.,Brokerage,**
**7 Eastvale Drive Unit 205 , Markham, L3S 4N8**
**905-201-9977, Fax: 416-335-5535 / 905-201-9229**

# வாகன விபத்தா? அழையுங்கள்

# MR. P. SINGARAJ

**MICHAEL TAYLOR**
**A PROFESSIONAL CORPORATION**



NO COMMISSION FOR HOUSEKEEPING!
NO COMMISSION FOR CARE GIVER!
NO COMMISSION FOR ATTENDANT CARE!
NO COMMISSION FOR INCOME REPLACEMENT!




வாகன விபத்தால் உங்களுக்கு ஏற்படும் இழப்புகளை தமிழிலும் ஆங்கிலத்திலும் உரையாடி சரியான முறையில் பெற்றுக்கொள்ள வேண்டுமானால் நீங்கள் அழைக்கப்பட வேண்டியவர் Mr. P. சிங்கராஜ். இவர் உங்களின் நண்பன்.





HONEST AND FRIENDLY SERVICE
**CALL: MR. P. SINGARAJ**
**416-993-8443**
**905-471-3058**




உ

சிவமயம்

# ஆத்மஜோதி

*தாபிதம்: 1948*

ARTHMA JOTHY

Est. 1948

ISSN 1703-9185

கனடா மலர் 15: இதழ் 3

ஜய வருடம்

ஐப்பசி - மார்கழி

திரு. ஆண்டு -2045

ஆங்கில ஆண்டு 2014

**கௌரவ ஆசிரியர்**

டாக்டர் இ. இலம்போதரன்

**பிரதம ஆசிரியர்**

திரு. வி. கந்தவனம்

**உதவி ஆசிரியர்கள்**

திரு. செ. சோமசுந்தரம்

திரு. சிவ. முத்துலிங்கம்

**எழுத்தமைப்பு**

திரு. மா. கனகசபாபதி

**அச்சுப் பதிப்பு**

விவேகா அச்சகம்

**வெளியீடு**

ஆத்மஜோதி

தியான நிலையம்

பதிவு இல: 1476651



**தொடர்பு முகவரி**

Siva Muthulingam

ARTHMAJOTHY ILLAM

1473 Birchmount Rd.

Toronto, ON. M1P 2G4

Tel: (416) 724-6240

www.arthmajothy.org


## உள்ளடக்கம்


| உள்ளடக்கம் | பக்கம் |
|---|---|
| ஆசிரியர் தலையங்கம் | 2 |
| எங்குமுள்ள பிள்ளையார் | 4 |
| மனித மேம்பாட்டுக் கல்வி | 5 |
| தொல்காப்பியத்தில் சித்தாந்த சிந்தனை | 8 |
| அக்கினி ஹோத்திரம் | 15 |
| பக்தி மார்க்கமே பரமனடி காட்டும் | 18 |
| பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி பாகம் - 4 | 22 |
| அரோகரா என்பது | 25 |
| வரலாற்றுப் பின்னணியில் ஆறுமுகநாவலர் | 26 |
| இந்திய திருத்தலயாத்திரை - 2013 பாகம் - 5 | 30 |
| வாழ்வியலுடன் ஒன்றிய இறையுணர்வு | 35 |
| ஓட்டைப்பானை - பகுதி 3 | 38 |
| பிறந்த நாள் வாழ்த்து | 40 |
| இந்து சமயப் பேரவைச் செய்திகள் | 42 |
| ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை | 47 |

# வாழும் சமயம்

மக்களை ஒழுங்குமுறையாக வாழவைப்பதற்குத் தோற்று விக்கப்பட்ட நெறிகளே சமயங்கள். ஆனால் இந்து சமயம் அப்படித் தோற்றுவிக்கப்பட்டதன்று. அது ஒரு தான்தோன்றிச் சமயம். தானாகவே தோன்றித் தானாகவே வளர்ந்து வருகின்றது. அருளாளரகள் அவ்வப்போது மக்களை அதன்வழி நடத்தி வந்துள்ளனர். வேதங்கள் அவர்களுக்கு உதவியாக இருந்திருக்கின்றன.

இன்று இந்து சமயம் பெரும் கற்பக விருட்சமாக வளர்ந் தோங்கியுள்ளது. வளர்ச்சிக்குக் காரணம் அதன் தகைமை களேயன்றி வேறொன்றில்லை. தகைமைகளில் முதன்மையானது அதன் சுதந்திரம். இயற்கையோடு ஒட்டிய வழிபாட்டுச் சுதந்திரம் பிற சமயத்தவரையும் கவர்ந்துள்ளது. அதன் வழிபாட்டு முறைகள் பலவற்றைக் பிற சமயத்தவரும் பின்பற்றிவருவது பலரும் அறிந்ததே.

அமெரிக்காவில் ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட அமெரிக்க மக்கள் இந்து சமயத்துக்கு மாறியுள்ளனர். அவர்களை எவரும் வலிந்து சமயமாற்றம் செய்யவில்லை. இந்து சமயம் சமயமாற்றம் செய்வதில்லை. பலர் தமது சுயவிருப்பத்தின் பெயரில் தாமாகவே இந்து சமய வாழ்வை மேற்கொண்டு வருகின்றனர்.

அதுபோலவே யேர்மனியிலும் பலர் இந்து சமயத்தைத் தழுவிவருகின்றனர். அங்குள்ள கம் காமாட்சி கோயிலில் தொண்டாற்றிவருகின்ற ஆன்மிகச் செல்வர் திரு. த. புவனேந்திரன் அவர்கள் ஆத்மஜோதிக்கு ஒரு செய்தி அனுப்பியிருக்கின்றார். அதன்படி யேர்மனியில் பெயர்பெற்ற கம் கோயிலில் கடந்த செப்டம்பர் மாதம் 22ஆம் நாள் திங்கட்கிழமை 25க்கும் அதிகமான யேர்மனியர் இந்து சமயத்துக்கு மாறியிருக் கின்றார்கள். தமது செலவில் வேள்வி ஒன்றை ஆலயக் குருக்கள் வண. பாஸ்கரக் குருக்களைக்கொண்டு செய்வித்துத் தீட்சை கேட்டு இந்து சமயத்துக்கு வந்துள்ளனர். அதனைத் தொடர்ந்து சத்சங்கம் ஒன்றும் நடந்திருக்கின்றது.

---

தானம் கொடுக்கும் பொழுது அன்புடன் கொடுக்க வேண்டும்.

இச் செய்தி அங்கு தமது சமயத்தைவிட்டு வேறு சமயத்துக்கு மாறியுள்ள இந்துக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்கிறது. ஒருசிலர் மீளவும் இந்து சமயத்துக்கு வருவதுபற்றி யோசித்துவருகிறார்களாம்.

இந்துக்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் இந்து சமயம் வாழும். அது என்றும் எங்கும் வாழுகின்ற சமயம்.

- வி. கந்தவனம்

---

## 2012 தை மாதம் தொடக்கம் ஆத்மஜோதி சஞ்சிகை தொடர்ந்து வெளிவருவதற்கு வருடந்தோறும் நிரந்தர நிதி உதவி வழங்குவோர்

| | |
|---|---|
| திரு. செல்லத்துரை சோமசுந்தரம் | $ 200.00 |
| செல்வன். மனோகாந்தன் விசாகன் | $ 200.00 |
| செல்வன் மனோகாந்தன் யாதவன் | $ 200.00 |
| திரு. விநாயகர் கந்தவனம் | $ 200.00 |
| திரு. வடிவேலு உமாகாந்தன் | $ 200.00 |
| திருமதி இராசமலர் சின்னராஜா | $ 200.00 |
| திரு. வடிவேலு ஞானகாந்தன் | $ 200.00 |
| திருமதி ஸ்ரீரங்கநாயகி சபாரத்தினம் | $ 200.00 |
| திரு. நிமலகாந்தன் யசோதநாயகி | $ 200.00 |
| திருமதி. கோகிலாம்பாள் கனகசபாபதி | $ 200.00 |
| திரு. ம. வரதகுமார் | $ 600.00 |
| திரு. சு. சிவபரமானந்தம் | $ 200.00 |
| திரு. செல்வா இராஜதுரை | $ 200.00 |
| திருமதி வேந்தினி ஈஸ்வரமூர்த்தி | $200.00 |
| திருமதி தங்கமுத்து தம்பித்துரை | $200.00 |
| திரு. ஆறுமுகம் சரவணமுத்து | $200.00 |
| அமரர் சரவணமுத்து ஞானசம்பந்தர் நினைவாக | $200.00 |
| அமரர் கந்தையா செல்லப்பா நினைவாக | $ 200.00 |
| இ. முருகேசு | $ 200.00 |
| S. சோமசுந்தரம் | $ 200.00 |

---

நாம் பிறர்மீது காட்டும் சிறிய கருணையால் இறைவரது பெரும் கருணையைப் பெறலாம்.

# எங்குமுள்ள பிள்ளையார்

## புத்தளம் சித்தி விநாயகர்

முத்துவளம் கொழிக்கின்ற மூத்த பேரூர்
முனைப்போடு தென்னைகள்வான் முட்டு மாவூர்
புத்தளத்திற் பத்தியுடன் போற்று வாரைப்
பொழுதெல்லாம் புரந்தருளும் புதுமை யாளர்
அத்திமுகர் ஆதிமுகர் அருள்மு கத்தார்
அசுரரையழித் தமரர்தமைக் காத்த வீரர்
சித்திவிநா யகர்மலர்த்தாள் சேரு வார்க்குத்
தீராத வினையாவும் தீரு மாமே. (137)

## கொழும்பு – பம்பலப்பிட்டி
## சம்மாங்கோடு மாணிக்க விநாயகர்

ஈனவிருள் மலக்கொடுமை இரிய வேண்டி
எச்சவினைப் பாவங்களை எறிய வேண்டி
ஞானவொளி நாகரிக வண்ணம் வேண்டி
நல்லகதி வந்தெளிதில் நண்ண வேண்டி
ஆனைமுக வசுரனுயிர் ஆய்ந்த மன்னர்
ஆறுமுகற் காரணங்கை ஈந்த வண்ணல்
மாநகர கொழும்புதிகழ் சம்மாங் கோட்டு
மாணிக்க விநாயகரை வணங்கு வாமே. (138)

## கொழும்பு – முகத்துவாரம்
## சித்தி விநாயகர்

நில்லாத உலகமதில் நீதி நிற்க
நேரான உரிமைகளை அனுப விக்கப்
பொல்லாத தீவினைகள் பொன்ற நாளும்
புவியினிலே அமைதிநிலை பொலிய மக்கள்
எல்லோரும் வேண்டுவன எய்தி ஆன்ற
இன்பத்தில் திளைத்தன்போ டினிது வாழச்
செல்வாய கொழும்புமுகத் துவாரந் தன்னில்
திகழ்சித்தி விநாயகர்தாள் சிந்திப் பாமே. (139)

- வி. கந்தவனம்

# மனித மேம்பாட்டுக் கல்வி

ஆத்மீக வள்ளல், ஆத்மஜோதி நா. முத்தையா

தற்போது மனிதமேம்பாட்டுக் கல்வியென்ற சொற்றொடர் எல்லாருடைய நாவிலும் உச்சரிக்கப்படுவதை நம்மால் காணமுடிகிறது. அதுவும் ஆறு வயது தொடக்கம் பதினாறு வயது வரை உள்ள இளைஞர்களுக்கு மிகமிக அவசியமானது என்று கல்விமான்கள் கூறுகின்றார்கள். எதிர்காலச் சந்ததியினராவது அமைதி, சாந்தம் என்பவைகளை அநுபவிக்க வேண்டும் என்பது அவர்களது ஆசையாகும்.

இது இன்றுதான் பேசப்படுகின்றதோ என்றால் அப்படியன்று. உலக நாகரீகம் பெறத் தொடங்கிய காலம் தொட்டுப் பேசப்பட்டு வருகின்றது. வள்ளுவர் தனது குறளில் இரண்டாவதாக

"கற்றத னாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்"

என்பதைக் கூறுகின்றார்.

தூய அறிவாக இருக்கின்ற பகவானுடைய நன்மை பயக்கத் தகுந்த பாதங்களை வணங்கமாட்டார் என்றால் அவர்கள் கல்வி கற்றதனால் அடைந்த பலன் என்னவோ தெரியவில்லை என்பது பொருள். நன்றாகப் படித்தவர்களாக இருந்தும் அறிவுக்கெல்லாம் அறிவாக இருக்கின்ற பகவானுக்கு வணக்கம் செலுத்த மறுக்கின்றவர்களும் இருக்கின்றார்களே! அவர்கள் படித்த படிப்பு என்ன படிப்பு?

கல்வி கற்பது அறிவுக்காக நாம் எவ்வளவு கல்வி கற்றாலும் அதிலிருந்து அறிந்துகொண்ட அறிவுக்குமேல் இன்னும் அறிய வேண்டிய அறிவு இருந்துகொண்டே இருக்கிறது. அந்த அறிவின் எல்லை எங்கே முடிகிறது என்று நாடுகின்றபோது அது நாமறிந்த அறிவுக்கு எட்டாததாக இருக்கிறது. ஆகவே நாம் அறிந்து கொள்ளமுடியாத அறிவு இருந்துகொண்டே இருப்பது மட்டும் நிச்சயமாகத்தெரிகிறது. நம் அறிவுக்கு எட்டாத அந்த அறிவின் பூரணத்தைத்தான் வாலறிவன் என்றும் பகவான்

நெய் உள்ளவரை தீபம் எரியும், வினைகள் உள்ளவரை இவ்வுடம்பு இருக்கும்.

என்றும் சொல்லுகிறோம். அந்த பகவான் என்ற பூரண அறிவிற்கு மிகவும் குறைந்ததுதான் நம்முடைய அறிவு என்பதை ஒப்புக் கொள்ளாவிட்டால் நாம் கற்ற கல்வியின் பயன் என்னவோ? ஒப்புக் கொண்டால் அதற்குத் தலை வணங்க வேண்டும்.

இதனை மணிவாசகர்

"இன்னுழை கதிரின் துன்னணுப் புரையச்
சிறியவாகப் பெரியோன்"

என்று கூறுகின்றார்.

வீட்டுக்குள் காற்றில் மிதந்து கொண்டிருக்கிற தூசிகள் போன்றவை பூமி, சந்திரன், சூரியன் முதலிய கோளங்கள், தூசிகள் நமக்கு அற்பமானவையாகத் தோன்றுவது போன்று இறைவனுக்கு அண்டகோடிகள் அற்பமானவைகளாம். இறைவனைப் பற்றிய பேருணர்வு வரும்போதுதான் இறைவனைப் பற்றிய பெருமையை அறியமுடியும்.

மனிதனை மேம்படுத்துவது ஆத்மீக உணர்வும், ஆத்மீகக் கல்வியுமாகும். நாம் எதை அறிந்து கொண்டால் எல்லாம் அறிந்ததாகுமோ அதுதான் ஆத்மா என்பது. தன்னை அறிந்தவன் தலைவனை அறிவான். ஒருமுறை தேவர் உலகத்தில் வியாழ பகவான் மேற்கூறிய கருத்தைச் சொன்னார். இதனைக் கேள்வியுற்ற தேவர்கள் தமது சார்பாக தேவேந்திரனையும், அசுரர் சார்பாக விரோசனனையும் அனுப்பி வைத்தனர். விரோசனன் இந்த உடம்புதான் ஆத்மா என்றும் இதனைப் போஷிக்கும் அளவிற்கு நீங்கள் நன்மை பெறுவீர்கள் என்றும் கூறினான். தேவேந்திரன் பலகாலம் வியாழ பகவானோடு உடனுறைந்து, ஆத்மீக உணர்வைப் பெற்றுத் தேவர்களுக்குக் கூறினான். இதனைக் கேட்ட தேவர்கள் உய்ந்தனர்.

ஆனால், விரோசனனிடம் அசுர புத்தி தொழிற்பட்டது போன்று நம்மிடமும் அசுர புத்தி தொழிற்படுகின்றது. அதனால், உடம்புதான் சாசுவதமானது என்று கருதி வாழ்நாள் முழுவதையும் உடம்பிற்காகவே செலவிட்டுக் கொண்டிருக்கிறோம். ஆத்மாவைப் பற்றிச் சிறிதும் சிந்தியாதவர்களாய் தினமும்

---

பூசும் நீறுபோல நமது உள்ளம் தூய்மையாக அமையவேண்டும். அப்பொழுது நமது செயல்களும் உலகத்திற்கு நன்மை பயப்பதாய் அமையும்.

ஆத்மாவைக் கொலைசெய்து கொண்டிருக்கிறோம். பட்டமும், பதவியும், பணமும், புகழும் ஆத்மாவை மேம்படுத்துவதில்லை. பக்தி ஒன்றினாலேதான் ஆத்மீக மேம்பாட்டை நாம் உணர முடியும்.

கல்வி கற்கும் சிறாகளுக்கு ஏழு வயதுக்கும் பதினாறு வயதுக்குமிடையில் மனித மேம்பாட்டுக்கான ஆத்மீகக் கல்வியைப் புகட்ட வேண்டும். சமயபாடத்தை முக்கிய பாடமாகக் கற்பிக்கும் இலங்கையில்தான் காரணமில்லாத கொலைகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. காரணம் ஆத்மீகத்தை அறிந்தவர்களாலோ அன்றி அதனைச் சாதனைப்படுத்து கிறவர்களாலோ பாடசாலைகளில் போதிக்கப்படுவதில்லை. விபூதியில் நம்பிக்கையில்லாத ஆசிரியர். விபூதியைப் பற்றிப் படிப்பிக்கின்றார். மாணவன் கேள்வி கேட்டால் எனக்கு உதில் எல்லாம் நம்பிக்கை இல்லை. பரீட்சையில் சித்தியடைய வேண்டுமானால் அதனைப் பாடமாக்கி எழுது என்கிறார்.

பாடசாலையிலேயே ஆன்மீக உணர்வு கொலை செய்யப்பட்டு விட்டது. இன்றைய இளைஞர்களின் நிலைமைக்கு ஆசிரிய சமுதாயமே முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளவேண்டும். பிரான்சில் ஒருகாலத்தில் ஒரு சட்டம் இருந்தது, அதாவது ஒருவன் இன்னொருவனைக் கொலை செய்தால் கொலை செய்தவனைப் படிப்பித்த ஆசிரியரே அத்தண்டனையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான் அந்தச் சட்டமாகும். இந்தச் சட்டம் நம் மத்தியில் அமுலாக்கப்பட்டால் எத்தனை ஆசிரியர்கள் உயிரோடிருப்பார்கள் என்பதை இறைவன் ஒருவரேதான் அறிவார்.

சமயபாடத்திலும், பிழையில்லை, மாணவர்களிலும் பிழை இல்லை, கற்பித்தவர்களில்தான் முழுப் பிழையுமாகும். இன்றைய நிலையில் மக்கள் உள்ளம் பண்பட சமயம் அவசியம். சமய உண்மைகள் மக்கள் இரத்தத்தில் ஊற சமயசாதனை அவசியம்.

---

*தமிழ் மந்திரங்களாகிய திருமுறைப் பாடல்களை அன்பு மேலிட ஓதுபவர்கள் இவ்வுலக வாழ்க்கையில் நேரும் எல்லாத் தீங்கில் இருந்தும் நீங்கி நலம் பெற்று வாழ்வார்கள்.*

*நாம் இறைவர் கையில் ஒரு கருவியே. நம்மைக்கொண்டு இறைவர் தம் காரியத்தை செய்கிறார்.*

# தொல்காப்பியத்தில் சித்தாந்தச் சிந்தனை

சித்தாந்தரத்தினம், கலாநிதி க. கணேசலிங்கம்

பழந்தமிழ் நூலான தொல்காப்பியம் இலக்கியத்திற்கு இலக்கணம் கூறும் பெருநூல் என்னும் பெருமை பெற்றது. ஆயினும், மொழி குறித்த இலக்கணம் கூறும் நூலாக மட்டும் இது அமையவில்லை. தமிழ் மக்களின் வாழ்வியல் குறித்த நூலாகவும் அமைந்துள்ளது.

இந்நூலிலிருந்து அன்றைய தமிழரின் வாழ்க்கை முறை, வாழ்வியற் சிந்தனைகள், கடவுட் கொள்கை, நிலப்பிரிவுகள் போன்ற பலவற்றை அறிய முடிகிறது. தமிழரின் தத்துவச் சிந்தனையையும் அறிவதோடு, அது சைவசித்தாந்தச் சிந்தனை என்பதையும் உணர முடிகின்றது.

### அழிவற்ற உயிர்

தமிழ்மொழியின் எழுத்துக்களை வகைப்படுத்திய முன்னோர்கள் அவற்றுக்கு உயிர், மெய், உயிர்மெய் என்று பெயரிட்டுள் ளார்கள். தொல்காப்பியரும் இப்பெயர்களில் எழுத்துக்களை வகைப்படுத்தி அவை குறித்த குறிப்புக்களை, இடத்துக்கிடம், எவ்வகை முரண்பாடுகளும் இன்றித் தந்து இலக்கணம் வகுத்துள்ளார்.

உடம்பு நிலையற்றது. அழியுந் தன்மை கொண்டது. இறை அல்லது பிரமம் ஒன்றே மெய்ப்பொருள், என்று கொள்ளும் வேதாந்திகள் உடம்பு ஒரு பொய்த் தோற்றம், அது மாயை என்ற கொள்கை உடையவர்கள். (சித்தாந்திகள் கொள்ளும் மாயையின் விளக்கம் வேதாந்திகள் கொள்வதிலிருந்து வேறுபட்டது.) ஆனால் உடம்பு அழியும் இயல்பு உடைய தாயினும், அது இருக்கும் வரை மெய்யான ஒன்று என்பது சித்தாந்தக் கொள்கை. உடம்பைக் குறிக்கும் மெய் என்ற சொல்லே இதனை உணர்த்துகிறது.

அழியும் இயல்புடைய மெய்க்கு முதலிடம் கொடாமல் அழியாத்

தன்மை கொண்ட உயிருக்கு சைவசித்தாந்தம் முதலிடம் கொடுக்கிறது. தமிழ்மொழிச் சொற்களில், உயிர் எழுத்துடன் கூடிய மெய் எழுத்து முதலில் வரும் மெய் எழுத்துக்கள் வருவதில்லை, என்பதைக் கூறித் தொல்காப்பியர் இதனை உணர்த்துகிறார். இது குறித்த தொல்காப்பியத் தொடர் வருமாறு.

'உயிர்மெய் அல்லன மொழி முதல் ஆகா'

உயிரோடு கூடிய உடம்பே இயக்கமுடையது. மெய் எழுத்துக்கள் முதலில் அமைதல் இல்லை என்ற இலக்கண விதி நிலையற்ற உடம்பின் இயல்பையும் அழிவற்ற உயிரின் உயர்வையும் உணர்த்துகிறது.

**உயிரின் வழியும் இயல்பும்**

உயிருக்குச் சில குறைகள் உள்ளன. ஆணவம் என்னும் மலத்தினால் பிணிக்கப்பட்டு அதன் ஆற்றல்கள் வெளிப்பட முடியாமல் இருக்கின்றன. இந்த நிலையை நீக்குவதற்காக, இறைவன் மாயை என்னும் நுண்பொருளிலிருந்து உடம்பையும், அதனுள்அமைந்தமனம்முதலியகருவிகளையும் படைத்தளிக் கிறான். இங்ஙனம் பெற்ற உடம்பின் மூலம் உயிர் செயல் புரிந்து அனுபவம் பெறுகிறது. அதன்மூலம் அறிவு வளர்கிறது. அறிவு வளர வளர உயிரைப் பிணித்த ஆணவக்கட்டு சிறிது சிறிதாக விலகுகிறது.

உயிரின் அறிவு, செயல், விருப்பு (ஞானம், கிரியை, இச்சை) ஆகிய ஆற்றல்கள் வெளிப்படத் தோன்றுவது அது பெற்ற உடம்பின் மூலமே. இச்சைவசித்தாந்தக் கருத்தை வெளிப் படுத்துவதாகப் பின்வரும் தொல்காப்பியத் தொடர் உள்ளது.

**'மெய்யின் வழியது உயிர்தோன்றும் நிலையே'.**

உயிர் பல பிறவிகள் எடுக்கிறது. பிறவிகள் எடுக்க முன் ஆணவ மலத்துடன் கூடி இருந்த நிலையொன்று உள்ளது. கேவலநிலை என்று இதனைச் சித்தாந்தம் கூறும். ஆணவ இருளில் இருந்த உயிரின் இந்த நிலையை 'காரிருளில் கண்ணிலாக் குழவிபோல' என்று தாயுமானவர் விளக்குகின்றார்.

இந்த நிலையைப் போக்கி உயிரை ஈடேற்றும் பொருட்டு முதன் முதலாக இறைவன் அதற்கு ஒரு நுண்ணுடம்பைப் படைத்தளிக்கிறான். புரியட்டகாயம் என்று சொல்லப்படும் இந்த நுண்ணுடம்பு, சித்தாந்தம் கூறும் மாயா காரியங்களாலான எட்டுத் தத்துவங்களால் ஆனது. இந்த நுண்ணுடம்பினோடு கூடி உயிர்கள் பல பிறவிகள் எடுக்கின்றன. முத்தியடையும் வரை இந்த நுண்ணுடம்பு உயிருடன் இருக்கிறது. அது உயிரின் உருவாக உள்ளது. பிறவி எடுத்த உயிரின் உடம்பு நீங்கிய பொழுது, உயிர் இந்த நுண்ணுடம்பாலான தனது உருவுடன் இருக்கிறது. இதனை விளக்குவதாகப் பின்வரும் தொல்காப்பியத் தொடர் உள்ளது.

**'மெய்யுயிர் நீங்கின் தன்உரு ஆகும்'**

எதனைச் சார்ந்திருக்கிறதோ அதுவாகவே இருத்தல் உயிரின் தன்மை. இதனைச் 'சார்ந்ததன் வண்ணமாதல்' என்று சித்தாந்தம் விளக்கும். உயிருக்கு இயல்பாகவே சில ஆற்றல்கள் உள்ளன. அறிவு அல்லது ஞானம், செயல் அல்லது கிரியை, எதனையும் செய்வதற்கும் அறிவதற்குமான விருப்பு அல்லது இச்சை. இந்த மூன்றும் உயிருக்கு இயல்பாகவே இருப்பவை. இதனால் 'இச்சா ஞானக் கிரியா சொரூபி' என்று உயிரை வர்ணிப்பதும் உண்டு. உடம்போடு கூடிப் பல அனுபவங்களைப் பெற்றாலும் உயிரின் இந்த இயல்புகள் மாறுவதில்லை. தொல்காப்பியத்தின் பின்வரும் தொடர் இதனை விளக்குகிறது.

**'மெய்யொடு இயையினும் உயிரியல் திரியா'.**

## அகர முதல்வன்

இறைவன் எங்கும் பரந்து வியாபகமாக உள்ளான். அனைத்துப் பொருட்களின் உள்ளும் அவற்றைக் கடந்தும் இருக்கிறான். கடவுள் என்ற தமிழ்ச்சொல் இதனை உணர்த்துவது. தொல்காப்பியர் கடவுள் என்ற சொல்லைப் பல இடங்களிற் கையாள்கிறார்.

கடவுள் இலக்கணத்துக்கு உயிரெழுத்தாகிய அகரத்தை உதாரணமாகக் காட்டுவது சைவ நூல்களில் காணக்கூடியது. சில எடுத்துக்காட்டுகள் வருமாறு:

'அகரமுதலானை அணியப்ப னூரானை' - சம்பந்தர்

'அகர முதலின் எழுத்தாகி நின்றாய்' - சுந்தரர்

'அகரமுமாகி அதிபனுமாகி அகமாகி' - அருணகிரிநாதர்

சைவ சித்தாந்த நூலாகிய திருவருட்பயனும் அகர எழுத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து இறைவனுக்கு உதாரணமாகக் காட்டுகிறது.

**'அகர உயிர்போல் அறிவாகி எங்கும்**
**நிகரில் இறை நிற்கும் நிறைந்து'**

அகரத்தின் சிறப்பை விளக்கும் தொல்காப்பியர் 'மெய்யின் இயக்கம் அகரமொடு சிவனும்' என்று கூறுகிறார். (சிவனும்-பொருந்தும்). மெய் எழுத்துக்களின் அசைவும் ஒலியும் அகர எழுத்தை ஒட்டியே அமையும் என்பது இதனால் விளக்கப்படு கிறது. இதற்கு விளக்கமாக நச்சினார்க்கினியர் பின்வருமாறு எழுதுகிறார்.

இறைவன் இயங்குதிணைக் கண்ணும் நிலைத்திணைக் கண்ணும் பிறவற்றின் கண்ணும் அவற்றின் கண்ணும் நிற்குமாப் போல, எல்லார்க்கும் ஒப்ப முடிந்தாற் போல, அகரமும் உயிர்க்கண்ணும், அவற்றின் தனிமெய்க் கண்ணும் கலந்து அவற்றின் தன்மையாகவே நிற்கும் என்பது ஒப்ப முடிந்தது..

**அடித்தளம்**

உயிர் பற்றிய நச்சினார்க்கினியாரின் கருத்து விளக்கமாக அமைந்த தொல்காப்பியத் தொடர் திருக்குறளின் முதற் குறட்பாவுக்குத் தளம் அமைத்ததைக் காணக் கூடியதாக உள்ளது.

‘அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.’

தொல்காப்பியத் தொடர்கள் சிலவற்றை ஒட்டித் திருக்குறட் பாக்கள் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

‘நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப’. - (தொல்காப்பியம்)

‘நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்’. - (திருக்குறள்)

திருக்குறட் கருத்துக்களும் சொல்லாட்சிகளும் பின்வந்த சைவசித்தாந்த நூல்களில் இடம் பெறுவதையும் காணலாம். ‘அகர முதல’ எனத் தொடங்கும் திருக்குறளின் முதற் பாடலைப் பின்பற்றி, சித்தாந்த நூல்களில் ஒன்றான திருவருட்பயன் ‘அகர உயிர்போல்’ எனத் தொடங்குகிறது. திருக்குறட் கருத்துக்கள் கூட சித்தாந்த நூல்களில் இடம்பெற்றுள்ளன.

எதனைச் சார்ந்து இருக்கிறதோ அதுவாகவே ஆதல் உயிரின் இயல்பு. இதனைச் “சார்ந்ததன் வண்ணமாதல்“ என்று கூறிச் சித்தாந்தம் விளக்கும். பின்வரும் திருக்குறட் பாடல் இது குறித்ததாக உள்ளது.

“ சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின் மற்றழித்து
சார்தரா சார்தரு நோய்” .

இக்குறளை உதாரணம் காட்டி “திருக்களிற்றுபடியார்“ என்ற சித்தாந்த நூல் பின்வருமாறு விளக்குகிறது.

“ சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின்” என்றமையால்
சார்புணர்தல் தானே தியானமுமாம்” .

**இறைவனும் வினைத் தொடர்பும்**

இறைவன் தன்னிலையில் குணங்கள் இல்லாதவன். அவன்

குணாதீதன். ஆயினும் ஆன்மாக்களுக்கு அருளும் வகையால், அவனுக்குள்ளதாகச் சில குணங்கள் கூறப்படுவதுண்டு. திருவள்ளுவர் அவனை 'எண்குணத்தான்' என்கிறார்.

**'கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்**
**தாளை வணங்காத் தலை'**

இக்குறளுக்கு உரை கூறும் பரிமேலழகர், அவனின் எட்டுக் குணங்களாக, முற்றறிவுடைமை, வரம்பிலாற்றலுடைமை முதலிய குணங்களைக் கூறுகிறார். அவற்றைக் கூறிய பரிமேலழகர், 'இவ்வாறு சைவ ஆகமங்களில் கூறப்பட்டுள்ளன' என்று சொல்லி முடிக்கிறார். இந்த எட்டுக் குணங்களில் ஒன்று 'இயல்பாகவே பாசங்களில் இருந்து நீங்குதல்.'

உயிருக்குக் கட்டாக (பாசமாக) அமைந்தது ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்கள் என்பது சித்தாந்தக் கருத்து. இறைவனைப் போல் இம்மலங்களும் என்றும் உள்ளவை அனாதியானவை.

அஞ்ஞானம், அகந்தை, கர்வம், கோபம் போன்ற அனைத்துக் குறைகளுக்கும் காரணமாக இருப்பது ஆணவம். இதன் பிடியிலிருந்து உயிர் விடுபட்டு உய்தி பெற வேண்டும் அஞ்ஞானம் அகல வேண்டும். இதற்காக இறைவன் மாயையிலிருந்து உடம்பையும் உலகையும் படைத்து உயிருக்கு அளிக்கிறான். இவற்றின் மூலம் உயிர் வினை செய்து அனுபவம் பெறுகிறது. அதனால் அறிவு பெறுகிறது அஞ்ஞானம் விலகுகிறது. ஆணவம் இல்லையாயின் மாயையும் தேவையற்றதாகிறது. வினைத் தொடர்பும் தேவையற்றதாகிறது. இறைவன் வினைத்தொடர்பு அற்றவன், "வினையின் நீங்கிய அறிவின் முனைவன்", என்று தொல்காப்பியம் கூறுகிறது. இதனால் அவன் ஆணவம் மாயை ஆகியவற்றின் தொடர்பும் இல்லாதவன் என்பதும் பெறப்படுகிறது.

இறைவன் உயிர்களின் ஆணவ நீக்கத்துக்குத் தேவையான அறிவு விளக்கத்திற்குத் துணை புரிகிறான். இது சித்தாந்தக்

கொள்கை. முதன்முதல் இறைவன் தட்சணாமூர்த்தி வடிவில் முனிவர்கள் நால்வருக்கு ஞான உபதேசம் செய்தான். அவனின் இந்த உபதேசமே உலகத்தவருக்கு முதல்நூலாக அமைந்தது. இயல்பாகவே வினைத்தொடர்பில்லாத அறிவு வடிவாகிய இறைவன் செய்தது முதல் நூல் என்று தொல்காப்பியம் கூறுகிறது.

**‘வினையின் நீங்கி விளங்கிய அறிவின்**
**முனைவன் கண்டது முதல்நூ லாகும்’.**

இது, இறைவன் வினையற்றவன். அறிவு வடிவானவன் என்ற சைவசித்தாந்தக் கருத்தை விளக்குவதாகவும் உள்ளது.

நாம் செய்த வினையின் பயனை நாமே அனுபவிக்க வேண்டும். ‘தீதும் நன்றும் பிறர்தர வாரா’ என்பது சங்கத் தமிழ் சொல்லும் அனுபவ வாயிலாக வந்த சைவசித்தாந்த உண்மை.
ஒரு பிறவியில் ஒருவன் செய்த வினையின் பலன் அப்பிறவியிலோ மறு பிறவியிலோ அவனை அடைந்து அனுபவத்துக்கு வருகிறது. காலம் என்ற தத்துவத்தின் அடிப்படையில் வந்து வினைப்பயன் வினை செய்தவனைச் சேர்கிறது என்பதும் சித்தாந்தக் கருத்து. இதனைத் தொல்காப்பியம் பின்வருமாறு விளக்குகிறது.

**‘வினை எனப்படுவது வேற்றுமை கொளாது**
**நினையும் காலை காலமொடு தோன்றும்’.**

தத்துவ உலகில் செயல், செயலின் பலன் இரண்டும் வினை எனப்படும். ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்றும் மும்மலங்கள் என்றும், அவை அனாதியானவை என்றும் சைவசித்தாந்தம் பொதுவாகக் கூறும். ஆயினும் ஆணவம், மாயை போல் கன்மத்தை அநாதியானது என்று கூறமுடியாது. கன்மம் அல்லது வினை என்பது செயல். எந்தச் செயலுக்கும் ஒரு கால அளவு உள்ளது. “காலமொடு தோன்றும்“ என்ற தொல்காப்பியத் தொடர் இதனைக் குறிப்பதாகவும் உள்ளது. எனவே. சைவசித்தாந்த நூற்கருத்துக்கள் சிலவற்றுக்கு திருக்குறட் பாடல்கள் சிலவும், அவற்றுக்கு மூலமான தொல்காப்பியக் கருத்துக்களும் அடித்தளமாக அமைந்துள்ளன என்று கருத இடமுண்டு.

# அக்கினிஹோத்திரம்

குருவடி பணிந்து
வைத்தியகலாநிதி இ. லம்போதரன்

'அக்னி மீளே புரோஹிதம்' என்று இருக்கு வேதம் தொடங்குகின்றது. அக்கினி ஹோத்திரத்தில் பாவிக்கும் அக்கினி மூன்று வகை. அக்கினி காரியங்கள் ஆரியர் வழமை என்று பலர் கூறி வந்தாலும் "மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து" என்று ஆகவனீயம், காருக பத்தியம், தக்ஷிணாக்கினி ஆகிய மூன்று வகையான அக்கினியையும் பற்றித் திருமுருகாற்றுப்படை கூறுகின்றது. திருமுருகாற்றுப்படை சைவ இலக்கியங்களின் தொகுப்பான திருமுறைகளில் பதினோராம் திருமுறையிலும், சங்க இலக்கியங்களின் தொகுப்புகளில் ஒன்றான பத்துப்பாட்டிலும் ஒருங்கே இடம்பெற்றிருக்கின்றது. இவ்வாறு திருமுறைகள் சங்க இலக்கியங்கள் இரண்டிலும் இடம் பிடித்துள்ள ஒரே பாடல் கடைச்சங்க காலத்து மதுரைக் கணக்காயனார் மகன் நக்கீரன் பாடிய திருமுருகாற்றுப்படைதான்.

**1. காருக பத்திய அக்கினி**

இதுதான் மிகவும் முக்கியமான அக்கினி. சிக்கி முக்கிக் கல்லைக்கொண்டோ அல்லது அரணிக்கட்டைகளை கடைந்தோ நெருப்பை உருவாக்கி இந்த அக்கினியை புதிதாக உருவாக்க வேண்டும். கார்ஹபத்யஸ்ரீ க்ருஹுபதிஸ்ரீ கிருகத்துக்கு அதிபதியாக இருந்து காப்பது என்று பொருள்.

**2. ஆகவனீய அக்கினி**

**3. தக்ஷிணாக்கினி**

பின்னர் சொன்ன இரண்டு அக்கினிகளையும் முன் சொன்ன கார்ஹபத்ய அக்கினியில் இருந்துதான் பற்ற விட்டு பசு நெய்யினால் ஹோமம் செய்ய வேண்டும்.

ஆலயங்களில் சிவாகமப்படி ஏகுண்டம், பஞ்சகுண்டம், நவகுண்டம் என்று அமைத்து யாகம் செய்வார்கள். இங்கே சிவ சம்பந்தமான அக்னியானது மிகச்சிறப்பாகப் பிரதிஷ்டை செய்யப்படும். பிரதான குண்டத்தில் உருவாக்கப்பெறும் இந்த

---

தமிழ் வேதத்தை அருளிய அருளாளர்களின் பாடல்கள் யாவும் வீட்டின்பத்தை உணர்த்துவன ஆகும்.

விருத்த சிவாக்னி என்ற அக்னியின் மூலமாக இன்னும் எட்டாக ஆஹவனீயாக்னி, தக்ஷிணாக்னி, கேவலாக்னி, கார்ஹபத்யாக்னி, விருத்தாக்னி, சாமான்யாக்னி, யௌவனாக்னி, பாலாக்னி, என்று நவ(ஒன்பது) குண்டங்களிலும் அக்னி உற்பத்தி செய்யப்பட்டு ஹோமங்கள் நடக்கும்.

நாளும் தமது இல்லத்தில் அக்கினி வளர்த்து எரியோம்பி வழிபடுதலை அந்தணர் செய்து வந்தனர். தாம் பயணம் செய்யும் காலத்திலும் தமது இல்லத்தில் இருந்து அக்கினியை உடன் எடுத்துச் செல்லும் வழமை உடையவர்களாக இவர்கள் இருந்தார்கள் என்று சம்பந்தர் திருமணத்துக்கு வந்திருந்த அந்தணர்களை 'புகைவிடும் வேள்விச் செந்தீ இல்லுடன் கொண்டு போவார்' என்று சேக்கிழார் பெரிய புராணத்தில் கூறிய பின்வரும் விவரத்தில் இருந்து அறியக் கிடைக்கின்றது.

தில்லை வாழ் அந்தணர்கள் எரியோம்பி வாழ்வதை

**கற்றாங் கெரியோம்பி கலியை வாராமே**
**செற்றார் வாழ்தில்லைச் சிற்றம்பல மேய**
**முற்றா வெண்டிங்கள் முதல்வன் பாதமே**
**பற்றா நின்றாரைப் பற்றா பாவமே**

என்று சம்பந்தர் தனது தேவாரத்தில் குறிப்பிடுகின்றார்.
திருஞான சம்பந்தருடைய அடியார் குழு திருநீலநக்கர் என்னும் அந்தணர் இல்லத்தில் எழுந்தருளியபோது அவர் திருஞான சம்பந்தரோடு இருந்த திருநீலகண்ட யாழ்ப்பாணர் என்னும் யாழிசை பாடும் பாணரை சம்பந்தரின் வேண்டுகோளின் பேரில் தனது இல்லத்திலேயே, அதுவும் தாம் அக்கினி வளர்த்துச் சிவ பூசை செய்யும் மேடையிலேயே இடம் கொடுத்தார். அடுத்த நாள் அவர் அக்கினி காரியம் செய்யும்போது சிவாக்கினி முன்னெப்போதும் இல்லாதவாறு பெரிதாக வலஞ் சுழித்து எழும்பி ஆசீர்வதித்தது என்று பெரிய புராணத்தில் பார்க்கின்றோம்.

---

உடலுக்கு உறுதி அளிக்கும் உலக நூல்களைக் காட்டிலும் உயிர்கக்கு உறுதி தரும் மேன்மை வாய்ந்தவை தமிழ் வேதங்கள் (திருமுறைகள்).

நின்ற அன்பரை நீலகண் டப்பெரும் பாணர்க்கு
இன்று தங்கவோர் இடங்கொடுத்து அருளுவீர் என்ன
நன்று மின்புற்று நடுமனை வேதியின் பாங்கர்ச்
சென்று மற்றவர்க் கிடங்கொடுத் தனர்திரு மறையோர்

ஆங்கு வேதியி லறாதசெந் தீவலஞ் சுழிவுற்று
ஓங்கி முன்னையில் ஒருபடித் தன்றியே யொளிரத்
தாங்கு நூலவர் மகிழ்வுறச் சகோடயாழ்த் தலைவர்
பாங்கு பாணியா ருடன்அரு ளாற்பள்ளி கொண்டார்

வேதமுறையில் இவ்வாறு அக்கினிஹோத்திரம் செய்யும் வழமை இப்போது இல்லையென்னும் அளவுக்கு அருகிவிட்டாலும் இப்போதும் தமது இல்லங்களில் நாளாந்தம் அக்கினிஹோத்திரம் செய்யும் வழமை உடைய அந்தணப் பெருமக்கள் ஆங்காங்கு இலைமறைகாயாக இருக்கத்தான் செய்கிறார்கள். ஆலயங்களில் காலையில் நாளும் அக்கினி காரியம் செய்யப்பட வேண்டும் என்பது சைவாகம விதி. நாம்தான் இவைகளைக் கண்டு கொள்வதில்லை. நாம் இப்போது சம்பந்தர் பாடிய "வேதவேள்வியை நிந்தனை செய்துழல் ஆதமிலி அமணரொடு தேரர் " போலாகிவிட்ட சைவர்கள் அல்லவா?

அக்கினிஹோத்திரம் செய்யும் அந்தணன் இறக்கும்பொழுது அவனுடன் அவனுடைய அக்கினிஹோத்திர வழிபாட்டுப் பொருட்கள் எல்லாவற்றையும் தகனம் செய்யவேண்டும் என்பது விதி.

---

## 2013 தை மாதத்திற்குப்பின் ஆத்மஜோதி சஞ்சிகைக்கு நிதி உதவி வழங்கியோர்

| | | |
|---|---|---|
| அமரர் வேலுப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை, உடுப்பிட்டி நினைவாக (2013) | | $100.00 |
| சு. சிவதாஸ், முன்னாள் ஆசிரியர், யாழ். ஸ்ரான்லி கல்லூரி (2013) | | $100.00 |
| பொ. தங்கராஜா | (2014) | $100.00 |
| திருமதி. கௌரி தர்மபாலா | (2014) | $200.00 |

(சிவமயச்செல்வி பரமேஸ்வரி சரவணமுத்து நினைவாக)

# பக்தி மார்க்கமே பரமனடி காட்டும்

சிவத்தமிழ்வித்தகர் சிவ. மகாலிங்கம்

ஆன்மா இறைவனுடைய திருவருளைப் பெறுவதற்கு இந்து சமயத் திருநூல்கள் பல்வேறு வழிகளைக் கூறியுள்ளன. கலியுகத்தில் இறைவனைப் பற்றிப் பிடிப்பதற்கு உகந்தது பக்தி மார்க்கம் என்றே நாரத மகரிஷி தனது பக்திச் சூத்திரத்தில் குறிப்பிடுகின்றார். அடியவர்கள் இறைவனைப் பற்றுவதற்குப் பக்தியாகிய வலையை வீச வேண்டும் என்கிறார். மாணிக்க வாசகர் அடியவன் வீசுகின்ற பக்தி வலையில் இருந்து அன்பனாகிய இறைவன் தப்ப முடியாது என்பதைப் "பக்தி வலையில் படுவோன் காண்க" என்று தெய்வ வாசகமாகிய திருவாசகம் குறிப்பிடுகின்றது.

அன்பின் முதிர்வு நிலைதான் பக்தி. "அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்" என்றே தமிழ் மறையாகிய திருக்குறளும் கூறுகின்றது. தூய அன்பினால் யாரையும் நம்வசப்படுத்தலாம் என்பது உலகியல் அனுபவம். அதிகார பலத்தாலோ ஆயுத பலத்தாலோ யாரையும் அடக்க முடியாது. இவ்வாறான அடக்கு முறைகள் நீண்ட காலம் நிலைப்பதில்லை. அன்பினால் கட்டுண்டு இருப்பவர்களின் பிணைப்பை எந்த ஒரு சக்தியாலும் அசைக்க முடியாது. கண்ணப்பனின் அன்பிற்குக் காளத்தியப்பன் கட்டுண்ட வரலாற்றைப் பெரிய புராணம் எடுத்து விளக்குகின்றது. காய் முற்றிக் கனியாக மாறுவதுபோல அன்பு முற்றிப் பக்தியாக பரிணமிக்கின்றது. பக்தி நெறியின் உயர்வு நிலைக்குச் சென்று விட்டால் அடியவன் பக்தனாகவே மாறிவிடுவான்.

**'பேர் அரையற்கு இங்ஙனே பித்து ஒருவர் ஆமாறும்**
**ஆர் ஒருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும்**
**வித்தகர்தாள்'**

என மாணிக்கவாசகப் பெருமானும் தனது திருவெம்பாவைப் பாடலில் பக்தனின் உயர்வு நிலையைப் பாடுகின்றார். இறை பித்துப் பிடித்த பக்தனின் நா எப்பொழுதும் இறை நாமத்தையே உச்சரிக்கும். ஹரி ஹரி என்று

---

ஐந்தெழுத்து மந்திரத்தை சொன்னால் எல்லா மந்திரத்தையும் சொன்ன புண்ணியம் உண்டு.

நாராயணனின் நாமத்தை இடைவிடாது உச்சரித்த பொழுதும் என்னைப் பித்தன் என்று பேசுகின்றார்கள். இதற்காக என்னால் உம்மைக் கைவிட முடியுமா? என்று உணர்வு பூர்வமாகப் பாடுவதைத் திருமங்கை ஆழ்வாரின் பின்வரும் பாடலில் காணலாம்.

**'அத்தா அரியே என்றுன்னை அழைக்கப்**
**பித்தா என்று பிறர் பேசுகின்றார்கள் என்னை**
**முத்தே மலை மாணிக்கமே முளைக்கின்ற வித்தே**
**உன்னை எங்ஙனம் நான் விடுகேனே'.**

பக்தி என்பது தான் இறைவன் என்ற இரண்டிலும் ஒருமை ஏற்பட்டதாக உணர்கின்ற உணர்வேயாகும். உண்மைச் சமயத்தின் உயிர்நாடியாகத் திகழ்வது பக்தியே ஆகும்.

இறைவனைப் பற்றிக் கொள்ள வேண்டும் என்று மனித மனம் முயல்கின்ற முயற்சியே பக்தி ஆகும். ஆன்மாவுக்கும் இறைவனுக்கும் உள்ள உறவு ஒன்றை மட்டும் ஆன்மா விரும்பி நிற்பதே பக்தி எனப்படும்.

தன்னை மறந்து தற்பேதமில்லாமல் ஒரு செயலை செய்தால் அது உள்நின்று தூண்டும் இறையருளால் செய்யப்பெற்றதாகவும், இந்நிலையே உண்மையான பக்தனின் நிலை என்றும் பெரிய புராணம் சித்தரிக்கின்றது. "சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும் அத்தன்" என அடியவர்களின் செயல்கள் அனைத்தும் ஆண்டவனின் செயல்கள் என மாணிக்கவாசகரின் திருவாசகமும் கூறுகின்றது.

அன்பு நெறியில் எது செய்தாலும் அது எம்பிரானுக்கு ஏற்றதாகும் என்பதை கண்ணப்ப நாயனார் புராணத்தின் ஊடாகச் சேக்கிழார் விளக்குகின்றார். குடுமித் தேவரைக் கண்ட மாத்திரத்தில் கண்ணப்பன் அன்புருவமாக மாறினார் என்பதைப் **'பொங்கிய ஒளியின் நீழல் பொருவில் அன்புருவம் ஆனார்'** எனப் பெரியபுராணம் குறிப்பிடுகின்றது.

ஆன்மா இறைவனை அடைவதற்காக, பகவத்கீதை கூறும் வழிகளில் பக்தியோகமும் ஒன்றாகும். நாரதர் பக்தியினை "ஆழ்ந்த இறைபற்று" என்று கூறுகின்றார். அன்பே கடவுள் என்ற உண்மைக்கு ஏற்ப வாழ்க்கை நடாத்துதலே பக்தி யோகம்

---

என்பது யாக்ஞவல்லிய மகரிஷியின் கருத்தாகும். இறைவன் தம்மைக் கைவிடமாட்டான் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை தான் பக்தி. அன்பின் மேலீட்டினால் தோன்றும் உரிமைப் பாட்டினை உண்மையைப் பக்தனின் வாயில் இருந்து வரும் வார்த்தைகள் வெளிப்படுத்தி விடும். அன்பின் மேலீட்டினால் ஏற்பட்ட உரிமை வாசகங்கள் பலவற்றை அருளாளர்களின் பாடல்களில் இருந்து அறிய முடிகிறது.

"ஆளாங்கிருப்பின் அடியார் தங்கள் அல்லல்
சொன்னக்கால்
வாளாங்கிருப்பின் திருவாரூரில் வாழ்ந்து போதீரே"

எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வாக்கும்

"நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே"

என்ற மாணிக்கவாசகரின் பாடல் வரிகளும் இந்த உண்மையினை எடுத்துக்காட்டுகின்றன.

உண்மையான பக்தன் இறைவனிடம் எதையும் கேட்டுப் பெறவேண்டிய தேவையில்லை. தன்னைப் பூரண சரணாகதியாகப் பிரபக்தி நிலையில் நின்று வணங்கும் அடியவனுக்கு எதைக் கொடுத்தல் வேண்டும். அவனை எவ்வாறு வழி நடாத்தல் வேண்டும் என்பதையெல்லாம் இறைவனே பார்த்துக் கொள்வார்.

"வேண்டும் பரிசு ஒன்று உண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே"

என்றே தெய்வ வாசகமாகிய திருவாசகமும் கூறுகின்றது.

பக்தியிலேயே நடிப்பு இருத்தல் கூடாது இறைவனிடம் அடியவன் வைக்கின்ற அன்பு இடையறாப் பேரன்பாக, இறவாத இன்ப அன்பாக, ஆவியோடாக்கை கசிந்துருகி வழிபடும் அன்பாக இருத்தல் வேண்டும். பஞ்சமா பாதகங்கள்

---

*சிவபெருமானின் திருவடிகளை புகழ்ந்து பாடுவதால்
வாயினால் செய்த தீமைகள் அகலும்.*

அனைத்தையும் துணிந்து செய்து விட்டுப் பக்தனின் வேடம் பூண்டு பெரியபுராணத்திலே வரும் முத்தநாதன் போல நடிக்கின்ற வேடதாரிகள் பலரை நாம் நமது சமூகத்திலே காண்கின்றோம். பாமர மக்களின் அறியாமையைப் பயன்படுத்திப் பணம் சம்பாதிக்கும் வேடதாரிகளும், போலிச் சாமியார்களும், சமய வியாபாரிகளும் நிறைந்து காணப்படும் இப் பிரபஞ்சத்தில் தான் உண்மையான பக்தனும் வாழுகின்றான். உண்மையான பக்தர்களின் தொகை ஆலயத்தின் உள்ளே அதிகரித்துக் காணப்பட்டால் அந்த ஆலயம் தெய்வ சாந்நித்தியத்துடன் ஒளிவீசிப் பிரகாசிக்கும். அயோக்கியர்களின் கூடாரமாக ஆலயங்கள் மாறினால் நாட்டிலே அராஜகம் தலைவிரித்தாடும். தர்மமும், நீதியும் நிலை குலைந்துவிடும். இந்த உண்மையை ஆடவல்லானாகிய நடராஜப்பெருமான் உணர்த்த உணர்ந்து கொண்ட சேந்தனார் தான் அருளிய திருப்பல்லாண்டில்

> "மிண்டு மனத்தவர் போமின்கள் மெய்யடியார்கள்
> விரைந்து வம்மின்"

என்று உண்மை அடியார்களைக் கூவி அழைப்பதைக் காணமுடிகிறது.

உலகிற் பிறந்த ஒவ்வொரு மனிதரும் உடல்நோய், உளநோய், உயிர்நோய் ஆகிய மூவகை நோய்களால் பீடிக்கப் படுகின்றார்கள். மூவகை நோயும் நீங்குவதற்கு இறையருள் அவசியமாகும். பிரபக்தி நிலையில் நின்று இறைவனை வழிபட்டால் இப்பிணிகளில் இருந்து நீங்கலாம். சிறப்பாக உயிர் நோயாகிய பிறவி நோய் நீங்குவதற்கும், பேரானந்த நிலையாகிய வீடுபேற்றினைப் பெறுவதற்கும் பிரபக்தி மார்க்கமே வழிகாட்டும்.

---

நம் சக்திக்கு அப்பாற்பட்டு நடக்கும் செயல்கள் யாவும் இறை வரது ஆணையால் அல்லது இறைவரது இச்சைப்படியே நடக்கின்றன.

உடலால் இறைவனை வணங்கினால் உடம்பால் செய்த தீமைகள் அகலும்.

# பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி - பாகம் 4

(சு. சிவதாஸ், முன்னாள் ஆசிரியர், யாழ். ஸ்ரான்லிக் கல்லூரி)

பாகம் 03 கட்டுரையில் 1914ம் ஆண்டு சரியாக 100 வருடங்களுக்கு முன்பு ரமண பகவான் முதன் முதலில் இயற்றிய 'அருணாச்சல அட்சர மணி மாலை' என்ற பக்தி - ஞான ஸ்தோத்திர நூலின் சிறப்புக்கள் சிலவற்றைப் பார்த்தோம். 108 இரட்டை வரிகளைக் கொண்ட இந்த அரிய நூலைப் பகவான் தமது 35வது வயதிலே, திருவண்ணாமலையின் விருட்பாட்ச குகையிலே அடியவர்களோடு வாழும்போதே அருளிச் செய்தார் என்றும் பார்த்தோம். அந்த நாட்களில் பகவான் பிராமண ஸ்வாமி என்றே அழைக்கப்பட்டு வந்தார் என்பதை நாம் நினைவில் கூரவேண்டும்.

விருட்பாட்ச குகையில் பிராமண ஸ்வாமி (ரமணர்) வாழும் சமயம், இந்தியாவிலே பெயர்போன காவிய கண்டகணபதி முனி பிராமண ஸ்வாமியைச் சந்தித்ததும் ஞானம் பெற்றதும் ஒரு முக்கியமான விடயமாகும். தெலுங்கு தேசத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட காவிய கண்டர் நான்கு வேதங்களையும் இளமையிலே மனனம் செய்தவர். வேதாந்தத்தை ஐயம் திரிபறக் கற்றவர். சாஸ்திர அறிவோடு பல யாத்திரைகள் சென்றும் உண்மை எது என்பதை அறிய முடியாமல் இருந்தவர். அவ்வாறான திருத்தல யாத்திரையின் போது கடைசியில் திருவண்ணாமலையை வந்தடைந்தார். விருட்பாட்ச குகையில் சமாதியில் அமர்ந்திருந்த பிராமண ஸ்வாமியைத் தரிசித்த பின் உடனே திரும்பிச் சென்றுவிட்டார். பின்னர் திருவண்ணா மலை ஆலயத்தை சுற்றிவரும் கிரிவலப் பாதையில் அமைந்திருக்கும் அட்டலிங்கங்களில் ஒன்றான நிருதிலிங்க ஆலயத்தின் சூழலில் உள்ள காடு ஒன்றில் பெரிய அடிமர உள்ளீடான மரப்பொந்தில் அமர்ந்து தியானத்தில் மூழ்கினார். ஆறாம் நாள் அம்பிகை இவரோடு பேசினாள் 'உனக்கு குரு ஒருவர் இல்லாமல் நீ உனது இலட்சியத்தை அடையமுடியாது, உனது குரு மலையின் மேலே இருக்கிறார். அவருடைய திவ்ய பாதத்தைச் சரணடை, அவருடைய அருள் உனக்கு

கிட்டும், இப்பொழுதே எழுந்து செல்'. இவ்வாசகம் கேட்டதும், காவிய கண்டர் உடனே எழுந்து விருட்பாட்ச குகையை அடைந்தார். அச்சமயத்தில் பிராமண ஸ்வாமி (ரமணர்) விருட்பாட்ச குகைக்கு வெளிப்புறத்தில் தனிமையாக இருப்பதைக் கண்டார். அவர் காவிய கண்டரின் மேல் தமது பார்வையைச் செலுத்தினார். பல பக்தர்களுடைய அனுபவத்தைப் போலவே காவிய கண்டரும் பிராமண ஸ்வாமியை பார்த்த பார்வையை விலக்க முடியாமல் மனமொன்றி நின்றார். இதற்கு முன்னர் யாரையும் வீழ்ந்து வணங்கியது கிடையாது ஆனால் தன்னை அறியாமலே ஸ்வாமியின் திவ்ய பாதங்களில் சாஷ்டாங்கமாக வீழ்நது கிடந்தார். ஸ்வாமியின் திவ்ய பாதங்களை இறுகப் பற்றிக் கொண்டு பின்வருமாறு ஓலமிட்டார் கற்க வேண்டிய யாவும் கற்றுவிட்டேன், முற்றாக வேதாந்தத்தை வாசித்துவிட்டேன், ஆயிரக்கணக்கில் மந்திர ஜபம் செய்துவிட்டேன். இருப்பினும், தவம் என்றால் என்ன என்று தெரியாது கலங்குகிறேன். ஆதலால் தங்கள் பாதங்களில் சரணடைகின்றேன். இப்போது தபஸ் அல்லது தவம் எனப்படுவது என்ன என்று விளக்கியருள வேண்டுகிறேன். காவிய கண்ட கணபதி முனிவரை சுவாமி (ரமணர்) கரம்பிடித்து எழுப்பி தமது விழிகளை அவரின் விழிகளில் செலுத்தி மெதுவாகப் பேசலானார்.

'நான்' 'நான்' என்பது எங்கேயிருந்து புறப்படு கின்றதோ அதைப் கவனித்தால் மனம் அங்கேயே வீனமாகும் (ஒடுங்கும்) அதுவே தவம் இவ்வாறு ஸ்வாமி உரைத்தலும் காவிய கண்டர் தான் ஆயிரக்கணக்கில் தினமும் மந்திர ஜபம் செய்வதாகக் குறிப்பிட்டார். ஒரு மந்திரத்தை ஜபம் பண்ணுங்கால், அந்த மந்திரத்துஒலி (சப்தம்) எங்கிருந்து புறப்படுகின்றது என்று கவனித்தால் மனம் அங்கேயே வீனமாகிறது (ஒடுங்குகிறது) அதுவே தவம். பக்தனுடைய பயிற்சி முறைக்கேற்ப தபஸ் அல்லது தவம் என்பதை சுவாமி (ரமணர்) எளிய முறையில் விளக்கியருளியதும், காவிய கண்டர் பேரின்பத்தில் மூழ்கித் திளைத்துக் கொண்டு இருந்தார். பகவானின் முன்னிலையில் மணித்தியாலக் கணக்காக

---

நமது தீவினைகளை யெல்லாம் துடைப்பவர் சிவபெருமான்.

ஆனந்தத்தில் மூழ்கித் திளைத்தார். கடைசியாக தமது விழிகளைத் திறந்த காவிய கண்டர் ஸ்வாமிக்கு அருகே நின்ற உதவியாளரான பழனிச்சாமியை பார்த்து கேட்டார், உங்கள் குருவுக்கு (ஸ்வாமிக்கு) என்ன பெயர் எனக் கேட்டார். மக்கள் இவரை பிராமண சுவாமி என்றே அழைக்கின்றார்கள், ஆனால் இவருக்கு தாய் தந்தையர் இட்ட பெயர் வெங்கடராமன் என்பதாகும் என்றார். காவிய கண்டரோ வெங்கடராமனில் இருந்து ரமணன் என்ற சொல்லை எடுத்தார், தான் அவரில் கடவுளைக் கண்டதனால் பகவான் என்று முன் அடையைக் கொடுத்தார், தவம் என்ற சொல்லுக்கு வேதங்களே விளக்கம் அளிக்காதபோது இவர் விளக்கம் அளித்ததால் வேதரிஷி எனக் கருதி அதிலும் மிகப் பெரிய ரிஷி என்பதால் மகரிஷி என்ற பெயரை பின் அடையாக வைத்தார். ஸ்ரீ என்பது திரு எனப் பொருள்படும் ஆதலால் பிராமண ஸ்வாமிக்கு பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி என்ற பெயரே மிகவும் பொருத்தமானது எனச் சூழ்ந்து நின்ற பக்தர்களுக்கு எடுத்தியம்பினார். அன்றிலிருந்து பிராமண ஸ்வாமி என்ற பெயர் போய் பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி என்ற பெயர் வழங்கலாயிற்று.

காவிய கண்ட கணபதி முனிக்கு இருநூறுக்கு (200) மேற்பட்ட சீடர்கள் இருந்தார்கள். பெயர் போன வேதபண்டிதர்களான தைவரதர் மற்றும் கபாலி சாஸ்திரி ஆகியோரும் இதில் அடங்குவர். பகவான் ரமணரை தமது குருவாக ஏற்ற பின்பு, தமது சீடர்களுக்கு தம்மைக் குருவாக ஏற்காமல் ரமண பகவானை குருவாகக் கொள்ளுங்கள் என்று அறிவித்தார். அத்தகைய சீரும் சிறப்பும் வாய்ந்த காவிய கண்டர் கேள்வி மறுமொழி முறையாக வடமொழியில் 300 சுலோகங்கள் கொண்ட ரமண கீதையை இயற்றியருளினார். பகவானிடம் தான் கேட்ட கேள்விகளையும் பகவான் கூறிய மறுமொழிகளையும் அடிப்படையாகக் கொண்டே அந்நூல் இயற்றப்பட்டது. பகவான் ரமணர் முழு சுலோகங்களையும் சரிபார்த்து அங்கீகாரம் அருளினார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

---

மனித இனம் கடைத்தேற வேண்டும் என்பதற்காகவே இறைவன் அருளாளர்களை மண்ணுலகிற்கு அனுப்புகின்றார்.

பகவான் எப்பொழுதும் காவிய கண்டரை மிகவும் மரியாதையுடன் அழைத்தே பேசுவார். ஆனால் காவிய கண்டரோ என்னை அப்படி கௌரவம் பண்ணி அழைக்க வேண்டாம் என்று அடிக்கடி சொல்லிக்கொள்வார். கடைசியில் பகவான் நாயனா என்று காவிய கண்டரை அழைத்தார். அது ஏனெனில் காவிய கண்டரின் சீடர்களும் காவிய கண்டரை நாயனா என்று தான் அழைப்பார்கள். வடமொழியில் நாயனா என்பதற்கு தந்தை என்று பொருள். பகவான் காவிய கண்டரை நாயனா என்று அழைப்பதும் காவிய கண்டருக்கு பிடிக்கவில்லை. ஆனால் நாயனா என்பதற்கு தெலுங்கு மொழியில் சீடன்,குழந்தை ஆகிய கருத்துக்கள் இருப்பதால் பகவான் தன்னை நாயனா என்று அழைக்கும் போது தெலுங்கு மொழியில் அழைக்கின்றார் என்று காவிய கண்டர் எடுத்துக் கொள்வார். அதனால்தான் பகவான் தன்னை நாயனா என்று அழைப்பதை ஏற்றுக்கொண்டார் காவிய கண்டர். காவிய கண்டரே ரமண மகரிஷியின் தாயார் இறந்த பிறகு சமாதி வைக்க வேண்டும் என்று அடித்துக் கூறி சமாதியின் மேல் கோயில் ஒன்று கட்ட வேண்டும் என்று கூறி அக்கோயிலுக்கு மாத்துரு பூதேஸ்வரர் என்ற நாமத்தையும் இட்டார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ரமண மகரிஷியின் வாழ்வில் மிகவும் முக்கியமானவர்களில் காவிய கண்டரும் ஒருவர்.

தொடரும்....

---

## அரோகரா என்பது

அரோகரா என்பது ஹரஹர என்னும் சமஸ்கிருதச் சொல்லின் தமிழாக்கம் ஆகும். ஹர என்பது சிவனின் நாமம். முதன்முதலில் மஹாகைலாசத்தில் பார்வதிக்கும் பரமேஸ்வரனுக்கும் நடந்த திருக்கலியாணத்தின் நிறைவில் மஹாவிஷ்ணுவானவர் ஹரஹர நம பார்வதி பதயே என்று கோஷம் எழுப்ப அங்கு குழுமியிருந்த தேவர்கள் அனைவரும் பதிலுக்கு ஹர ஹர மஹாதேவா என்று கோஷமிட்டனர். இந்த வரலாறு ஸ்காந்த புராணத்தில் உள்ளது.

குருவடி பணிந்து
இ. லம்போதரன்

# வரலாற்றுப் பின்னணியில் ஆறுமுக நாவலர்

ஆ. கோ. நடராசன், Ph. D.,
பேராசிரியர், மொழியியல் உயராய்வு மையம்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

சென்ற இதழ் தொடர்ச்சி

**வள்ளலார் இராமலிங்க அடிகள்,**

வள்ளலார் இன்றைய கடலூர் மாவட்டத்தில் தில்லையின் வடமேற்கே மருதூரில் தோன்றியவர். தமிழ்ப் புலமையும், இறையருளும் கைவரப் பெற்றவர். தமிழக மக்கள் யாவராலும் அறியப் பெற்றவர். ஆறுமுக நாவலர் காலத்தில் வாழ்ந்தவர் என்பதைவிட வள்ளலார் காலத்தில் நாவலர் வாழ்ந்தார் என்று கூறுவதே சிறப்பாகும். வள்ளலாரைப் பின்பற்றி அவர் பின் சென்ற கூட்டமே அதிகம் எனலாம், வள்ளலார் சிதம்பர நடராஜ பெருமானை வணங்கிப் போற்றிப் பாடியவர். நாவலர் பெருந்தகையும் நடராஜ பெருமானை வணங்கி நின்றவர். ஒரே காலம், ஒரே இடம், ஒரே இறைவன் என இருவரும் வரலாற்றுப் பிண்ணனியில் ஒன்றுபட்டவர்கள் என்ற போதிலும் சைவ சித்தாந்தக் கோட்பாட்டில் வேறுபட்ட நிலையும் அதனடிப் படையில் தோன்றிய சர்ச்சையில் மாறுபட்டு நின்றதையும் காண முடிகிறது.

வள்ளலாரின் படைப்புகளில் திருவருட்பா யாவராலும் போற்றத்தகுந்தவை. இவரின் தமிழ்நடை இனிமையும், இறையருள் உருக்கமும் எவர்க்கும் பேரின்பத்தைக் கொடுக்க வல்லவை. வள்ளலார் சைவசமயக் குரவர் நால்வரின் தேவாரம், திருவாசகம் ஆகிய இரண்டையும் பின்பற்றி நின்றவர். இதனை இவருடைய திருவருட்பாவினில் காணலாம். நால்வரின் கருத்துக்களையும் பாடல் வரிகளையும் தன்பாடல்களில் எடுத்தாண்டவர் என்றால் மிகையாகாது. இருந்த போதிலும் திருவருட்பா ஆறுதிரு முறைகளாக வகுக்கப்படுவதை நாவலர் பெருந்தகை ஒப்ப வில்லை. சைவத்தில் பன்னிருதிருமுறை சேக்கிழாரின் பெரிய புராணக் காலம் வரை வகுக்கப்பட்டுள்ளது. அந்த முறை

---

படகு போன்ற இந்த உடலைக் கொண்டு பிறவியாகிய கடலைக் கடக்க வேண்டும்.

வைப்பைப் போலவே வள்ளலாரும் முறைவைப்பு செய்தார். அந்தத் திருமுறைகளும் திருவருட்பாவை வள்ளலார் திருமுறை களாக பகுத்தமையும் ஒப்பாகாது என நாவலர் மறுத்தார். இதற்கும் மேலாக அருட்பா என்பதை மருட்பா என்றும் சுட்டினார்.

இராமலிங்க அடிகள் மரணமிலாப் பெருவாழ்வு வாழ்ந்திடலாம் - கண்டீர் எனப் புகன்றதையும் நாவலர் பெருமான் ஏற்கவில்லை. சைவ சித்தாந்த கோடபாட்டின்படி ஆன்மாவிற்கு மரணம் கிடையாது. இறைவனடியைச் சேர்ந்த உயிர்களே பிறவிப் பெருங்கடலை நீந்திக் கடந்தவை ஆகும். அப்படிப் பிறவிப் பெருங்கடலை நீந்தாத உயிர்கள் மீண்டும் மீண்டும் பிறவி கொள்கின்றன. இந்த இரண்டு நிலைகளிலும் ஆன்மாவிற்கு மரணம் கிடையாது என்பது உறுதி செய்யப்படுகிறது. உடல் மட்டுமே அழியக் கூடியது. திருவள்ளுவர்

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவ னடிச்சேரா தார்.**

எனக்கூறுவது இவற்றுடன் ஒப்பு நோக்கதக்கது.
ஆனால் இராமலிங்க அடிகள் செத்தாரை எழுப்புவதாகக் கூறும் மரணமிலாப் பெருவாழ்வு தவறானது என்பதே நாவலரின் வாதம். பாண்டிச்சேரியில் அரவிந்தர் பெருந்தகை மீண்டும் உயிர்த் தெழுவேனென்றதையும் இங்கு ஒப்பு நோக்கலாம். அரவிந்தர் இறந்துபட்டபின் அவர்தம் சீடர்கள் அவர் உயிர்த்தெழுவார் என்ற நம்பிக்கையில் மூன்று நாட்கள் காத்திருந்தனர். ஆனால் அவர் உயிர்த்தெழாமை உணர்ந்தபின் பூதவுடலுக்கு சமாதி அமைத்தனர்.

இராமலிங்க அடிகள், தாம் மீண்டும் வருவேன் என்றார். தனதுடம்பைப் பிரணவதேகமாக்கிக் கொண்டதால் அவ்வுடம்பிற்கு அழிவில்லை என்றே கூறினார். சாகாக் கலை அல்லது மரணமிலாப் பெருவாழ்வு என்ற கோட்பாட்டினடிப்படையில் நின்றார். சைவ சித்தாந்த அடிப்படையில் அருள்த் தேகம் அடைவதையே சிறப்பாகக் கொண்ட கோட்பாட்டில் நின்றவர் ஆறுமுக நாவலர். எனவே இராமலிங்க அடிகளை மாறுபட்ட கருத்தினராகக் கொண்டார். இக்கோட்பாட்டு நிலைகளில் ஆறுமுக நாவலர் கருத்தே வரலாற்று அடிப்படையில் நிலை நின்றதெனலாம்.

---

*வாழ்க்கை ஒரு இரயில் வண்டிப் பயணம் என்பதை நினைவில் கொண்டு வாழ்க்கையை நடத்த வேண்டும்.*

இராமலிங்க அடிகளின் கோட்பாட்டில்லயித்து நின்ற அறிஞர்கள் பலர். அவர்களுள் மறைமலையடிகள் முதன்மையானவர். அதே நேரத்தில் சதாஅவதானி கதிரவேற் பிள்ளை போன்ற சைவத் தமிழறிஞர்கள் ஆறுமுக நாவலரின் கோட்பாட்டில் தங்களை ஆட்படுத்திக் கொண்டனர். இரண்டு தரப்பினருக்கு மிடையே வள்ளலாரின் மரணமிலாப் பெருவாழ்வு சரியானதே! தவறானதே! என்னும் இராமலிங்க அடிகளின் பாக்கள் அருட்பாக்கள் ஆகா மருட்பாக்களேயாம் என்ற தலைப்புக்களில் சொற்போர் நடந்த வண்ணமிருந்த காலம் அது ஆகும். மறைமலை யடிகள் பலமுறை சொற்போரில் வென்று இராமலிங்க அடிகளின் கோட்பாட்டை நிலைநிறுத்தினர். கதிரவேற்பிள்ளையும் விட்டபாடில்லை மீண்டும் மீண்டும் சென்னையிலும் திருச்சியிலுமாக பொதுமேடையில் சொற்போர் செய்ய மறைமலையடிகளை அழைத்தார். இந்த நிலையில் மறைமலையடிகளைப் பின்பற்றும் தொண்டர்கள் கதிரவேற் பிள்ளையைக் கொலை மிரட்டல் செய்யும் நிகழ்வுகளும் ஏற்பட்டன. ஆயினும் மறைமலையடிகள் கதிரவேற்பிள்ளையைப் பாதுகாத்துக் காப்பாற்றித் தன் பொறுப்பில் வைத்தார் தன் தொண்டர்களைத் தானே நேரில் சென்று கடிந்தார்.

ஆயினும் அப்படிப்பட்ட மறைமலையடிகளே தன் நாட்குறிப்பில் வள்ளலார் சிவபதமடைந்ததைக் குறிப்பிடும் போது வேறுபட்ட நிலையினராகத் தோன்றுகிறார். வள்ளலாரின் பூத உடல் முடிவில் அடக்கம் செய்யப் பெற்றதைக் கீழ்க்கண்டவாறு சுட்டுகிறார்.

நாங்கள் இராமலிங்க சுவாமிகள் தம் பொருள்கள் அனைத்தையும் விட்டுச் சென்ற மேட்டுக்குப்பம் சென்றிருந்தோம். சுவாமிகள் உண்மையில் இறநதுவிட்டார். அவர் எலும்பை ஒரு மட்பாண்டத்தில் இட்டு ஞானசபையின் அடியில் ஒரு சிறு அறையில் வைக்கப்பட்டது. அவர்,அற்புதங்கள் எதுவும் செய்யவில்லை. அற்புதங்கள் செய்ய முயன்று தோற்றுவிட்டார் என்னும் மறைவான (ரகசியம்) செய்திகளை அறிந்தேன். எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும் யாரும் தம் விருப்பப்படி அற்புதங்கள் செய்ய முயலலாகாது. அவர் ஆண்டவன் அருளையும், திருவுள்ளத்தையும் சார்ந்தே இருக்க வேண்டும் என்பதாகும்.

---

புறம் கூறுவதால் நமது புண்ணியம் தேயும்

சைவ சித்தாந்த கோட்பாடுகளில் கூறப்படும் அருட்தேகம் அடையும் முக்தி முறையே சரியான நெறிமுறையாகும். இதன்படி ஆன்மா இறைவனோடு இரண்டறக் கலந்து ஞானமுக்திப் பேறு அடைகிறது. உடம்பைப் பற்றிக் கவலைப்படாமல் உயிர் பிறவிப் பெருங்கடலை நீந்தி இறைவனடி சேரும் நிலையே சிறப்பானது. ஆறுமுக நாவலர் வலியுறுத்தியதும் இதையே இதை விடுத்து செத்தபின் மீண்டும் உடம்பைப் பெறுதல் எனும் சித்து அத்துணை சிறப்பானதல்ல. ஆயினும் பல சித்தர்கள் பல காலங்களில் நிகழ்த்தியதாகக் கூறப்படும் இவ்வகை சித்து தன்னாலும் செய்தற்கு எளியது என இராமலிங்கவடிகள் செய்ய முயன்றனர் போலும். (தொடரும்)

---

## ஆத்மஜோதி வாசகர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்

ஆத்மஜோதி அன்பர்களே

ஆத்மஜோதி காலாண்டு இதழானது 3000 பிரதிகள்படி ஆண்டுக்கு 12000 மலர்கள் இலவசமாக தபாலிலும், நேரடியாகவும், வியாபார நிலையங்களிலும் ஆலயங்களிலும் விநியோகம் செய்யப்பட்டு தங்கள் கரங்களில் தவழுகின்றது.

65 வருடங்களுக்கு மேலாக தடையின்றி வெளிவரும் ஆன்மீக இதழ் கனடாவிலிருந்து தொடர்ந்து வெளிவருவது ஈழமக்களின் ஆன்மீகப் பற்றுக்கு நல்லதொரு சான்று. இப் பெருமை வாய்ந்த 'ஆத்மஜோதி' க்கு தபால் செலவு உட்பட இதர செலவுகளும் உண்டு.

அருட்செல்வம் நிறைந்த 'ஆத்மஜோதி' பொருட் செல்வம் குறைந்த நிலைகண்டு மனம் கலங்குகிறோம்.

ஆன்மீக நூல்கள் வெளிவர உதவி புரிதல் ஞானதானம் ஆகும். ஞானதானத்தின் பிரதி பலனாக பரம்பரை பரம்பரையாக கல்விச் செல்வம் பெறலாம். உடல் உழைப்பால் வரும் பணச் செல்வம் இப் பிறப்பிற்கு பயன் தரும். கல்விச் செல்வம் எப்பிறப்பிற்கும் பயன் தரும். ஞானதானம் பற்றி ஞானிகள் மக்களை ஊக்கப் படுத்துவது இதன் பொருட்டேயாகும்.

ஞானதானம் செய்து தாங்களும் தங்கள் பிள்ளைகளும் பயன்பெற அன்போடு 'ஆத்மஜோதி' வேண்டுகிறது. தங்களது நிதியுதவியை விருப்புடன் வரவேற்கிறோம

# இந்திய திருத்தல யாத்திரை – 2013
# பாகம் -5

திருமுறைச் செல்வர் சிவ. முத்துலிங்கம்

ஐந்தாவது முறையாக கனடாவில் இருந்து இந்தியத் திருத்தல யாத்திரையை மேற்கொண்ட நாம் தேவாரத் திருமுறைகள் ஏழையும் முற்றோதிய விபரங்களை கடந்த நான்கு இதழ்களில் குறிப்பிட்டிருந்தேன். எட்டாம் திருமுறையாகிய திருவாசகத்தை முற்றோதுவதற்கு மணிவாசகப் பெருமான் திருவடி தீட்சை பெற்ற திருப்பெருந்துறை ஆலயத்திற்குச் செல்வதாக தீர்மானித்தோம். கடந்த ஐந்துமுறை திருத்தல யாத்திரை செய்த பொழுது இப்புனித ஆலயத்தில் திருவாசகம் முற்றோதும் பெரும் பாக்கியத்தை நாம் பெற்றிருந்தோம். மாணிக்கவாசகப் பெருமானே எழுந்தருளி மூர்த்தியாகவிருக்கும் இவ்வாலயத்தில் மணிவாசகப் பெருமானின் அருள் வீச்சு மிகவும் உன்னதமாக இருப்பதை கடந்த ஐந்து முறையும் முற்றோதும் போது உணர்ந்துள்ளோம். இங்கே சிவபெருமான் அருவமாகக் காட்சி அளிக்கின்றார். ஆவுடையார் கோயில் என அழைக்கப்படும் இவ்வாலயம் புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கிக்குப் பக்கத்தில் உள்ளது. பாண்டி நாட்டு அமைச்சராகவிருந்த வாதவூரரை மாணிக்கவாசகர் ஆக ஆக்கிய மாட்சிமை பெற்ற தலம். சிவபொருமானே குரு வடிவாக வந்து மாணிக்கவாச கருக்கு திருவடி தீட்சை கொடுத்த புண்ணிய தலம். இத்திருக் கோயில் இறைவனின் கட்டளைப் படி மாணிக்கவாசகரால் கட்டப்பட்டது. திருவாவடுதுறை ஆதினத்தின் அருளாட்சிக்கு உட்பட் கோயில் ஆதின நிர்வாகமே கோயிலை நிர்வகிக்கின்றனர்.

இக்கோயிலின் இறைவனின் பெயர் ஆத்மநாத சுவாமி, இறைவியின் பெயர் குயாகாம்பாள், தலவிருட்சம் குருந்தமரம், தீர்த்தம் அக்னி தீர்த்தம் திருவாசகத்தில் உள்ள ஐம்பொத்தொரு பதிகங்களில் இருபது பதிகங்களை மணிவாசகர் இத்தலத்தில் பாடியுள்ளார். இவ் ஆலயத்தில் இறைவன் அருவமாகவிருந்து

---

அமைதியும் அன்பும் நிறைந்த வழிபாட்டினால்
மகிழ்பவர் இறைவன்

மனித உள்ளங்களின் சித்ததைச் சிவமாக்கும் சித்தினைச் செய்தருளுகின்றார். மாணிக்கவாசகரின் சன்னிதானத்திற்கு முன்பாக வழமை போல திருவாசக முற்றோதலை ஆரம்பித்தோம். நூற்றுக்கணக்கான தரம் பலவருடங்களாக திருவாசகம் முற்றோதலை மேற்கொண்டுள்ளோம். இப்புண்ணிய தலத்தில் திருவாசகம் முற்றோதலை மேற்கொள்ளும் போது எமது புலன்கள் யாவும் கட்டுப்படுகின்றது. சித்தம் சிவன் பாலே நிலைத்து நிற்கின்றது. உள்ளம் உருகுகின்றது. இறை சிந்தனையுடன் திருவாசகத்துடன் ஒன்றி முற்றோதும் நிலை எமக்கு ஏற்பட்டது. அவை எல்லாம் இவ்வாலயத்தின் சன்னிதானப் பெருமை என்பதே வெள்ளிடைமலையாகும். இவ்வாலயத்தில் முற்றோதிக் கொண்டிருக்கும் பொழுது ஆலய பிரதமக் குருக்களின் ஏற்பாட்டில் தமிழ்நாட்டின் பிரபல பத்திரிகையான தினமலர் பத்திரிகையில் இருந்து நிருபர் ஒருவர் பேட்டி கண்டார். இப்பேட்டி மறுநாள் பத்திரிகையில் வெளிவந்தது.

திருவாசகம் முற்றோதி பூர்த்தி செய்த பின்பு வழமை போல அபிசேக ஆராதனையை ஆத்மநாத சுவாமிக்கு மேற்கொண்டோம். மாலை திருப்பெருந்துறை பெருமானின் ஆலயத்தை விட்டு விலக விருப்பமில்லாமல் இராமேஸ்வரத்தை நோக்கி எங்கள் யாத்திரையைத் தொடர்ந்தோம். அங்கே அன்றிரவு விடுதியில் ஓய்வு பெற்றோம். மறுநாள் காலை 29.11.2013 வெள்ளிக் கிழமை அதிகாலை எழுந்து இராமேஸ்வரம் கடலில் தீர்த்தமாடிய பின் ஆலயத்திற்குள் அமைந்திருக்கும் இருபத்தியிரண்டு தீர்த்தக் கிணறுகளில் புனித நீராடினோம். புனித நீராடிய பின் இராமேஸ்வரப் பெருமானின் தரிசனத்தை பெற்றொம்.

பாண்டிய நாட்டில் அமைந்திருக்கும் இத்திருத்தலத்தைத் தரிசிப்பதற்கு இந்தியாவின் பலபாகங்களிலிருந்து யாத்திரிகர்கள் வந்து தரிசித்துச் செல்கின்றனர். பன்னிரண்டு ஜோதீர் லிங்கத் தலங்களில் இதுவுமொன்றாகும். இராவணனைக் கொன்ற பாவம் நீங்க இராமபிரான் சிவலிங்கப் பிரதிட்டை செய்து வழிபட்ட தலமாகும். சிவபூசைக்கு சிவலிங்கத்தை எடுத்து வருவதற்காக கைலாயத்தை நோக்கிச் சென்ற ஆஞ்சநேயர் வரப்பிந்தியதால்

---

உண்மை ஞானம் என்பது பற்றுக்களை
சிறிது சிறிதாக விடுவது தான்.

சீதா பிராட்டி கடற்கரை மணலில் அமைத்த லிங்கத்தை இராமர் வழிபட்டார் இம்மூர்த்தியே இன்றும் இராமநாத சுவாமி என அழைக்கப்படுகின்றார். காலம் தாழ்த்தி அனுமான் கொண்டு வந்த லிங்கம் பக்கத்திலேயே பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. இங்கு வந்து மூழ்கினால் தான் காசி யாத்திரை பூர்த்தியாகும் என்பது மரபு.

இங்கேயுள்ள இறைவனின் பெயர் இராமநாத சுவாமி, இறைவியின் பெயர் பர்வதவர்த்தினி, தீர்த்தம் கோயிலுக்குள்ளே உள்ள இருபத்தியிரண்டு தீர்த்தம். கோயிலிற்கு வெளியிலும் இருபத்தியிரண்டு தீர்த்தங்கள் உள்ளன. அவை தேவிபட்டணம், திருப்புல்லாணி, பாம்பன், தங்கச்சிமடம் முதலிய இடங்களில் உள்ளன. சம்பந்தர், அப்பர் சுவாமிகள் ஆகியோரால் பாடல் பெற்ற தலம். கி.பி பன்னிரண்டாம் நூற்றாண்டில் இக் கோயிலில் பல புனர்நிர்மாண வேலைகளை இலங்கை மன்னர் பராக்கிரமபாகு செய்ததாக தல வரலாறு கூறுகிறது. வாழ்நாளில் ஒவ்வொருவரும் காசி, இராமேஸ்வரம் தீர்த்த யாத்திரையை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு செல்வோர் முதலில் இராமேஸ்வரம் வந்து கடலில் நீராடி இராமநாதசுவாமியை வணங்கிய பின் இங்கிருந்து கடல் மண்ணை எடுத்துக் கொண்டு காசி சென்று கங்கையில் கரைத்து, கங்கையில் நீராடி விஸ்வநாதரைத் தொழுத பின் கங்கை நீருடன் திரும்பவும் இராமேஸ்வரம் வந்து இராமநாத சுவாமிக்கு அபிசேகம் செய்து வணங்கியே யாத்திரையை பூர்த்தி செயய வேண்டும் என்பது காசி - இராமேஸ்வர யாத்திரை மரபாகும்.

காலையில் இராமேஸ்வர தரிசனத்தைப் பூர்த்தி செய்த பின்பு திருவலசையில் உள்ள பாம்பன் சுவாமிகளின் முருகன் கோயிலுக்கு சென்றோம். பாம்பன் சுவாமிகள் கிடங்கு வெட்டி கிடங்குக்குள் பல நாட்கள் இருந்து தவம் புரிந்த சிறப்புக்குரிய ஆலயமாகும். முருகப்பெருமானின் திருக்காட்சியைக் கண்டபின்பே தன் தவத்தை பூர்த்தி செய்வேன் என்று அவருடைய திடசங்கர்ப்பத்திற்கு செவி சாய்த்த முருகப்பெருமான் நேரடியாக வந்து காட்சி கொடுத்து சடாட்சர மந்திரத்தை அவருடைய நாவிலே எழுதினார் என்பது வரலாறு பாம்பன்

---

வழிபாடு என்பது ஆன்மாவை ஆண்டவருடன்
இணைக்கும் ஒரு செயலே ஆகும்.

சுவாமிகள் தவம் இயற்றிய அதே இடத்தில் ஆலயம் அமைந்துள்ளது. ஆலயக் கருவறையில் முருகப் பெருமானின் திருவுருவச் சிலையின் கீழ் பத்மாசனத்திலே வீற்றிருக்கும் பாம்பன் சுவாமிகளின் திருவுருவச் சிலை அமைந்துள்ளது. இவ் ஆலயத்தில் திருக்கோவையாரை முற்றோதுவதற்கு ஆரம்பித்தோம். எங்கள் உதவியாளர்களான சந்திரசேகரன் குழுவினர் எமக்கு உணவு தயாரிப்பில் ஈடுபட்டனர். இவ் ஆலயத்தில் நண்பகல் மதிய போசனத்தை ஏற்றபின்பு ஆலய தரிசனத்தைப் பூர்த்தி செய்து கொண்டு உத்தரகோசமங்கையை நோக்கிப் புறப்பட்டோம். உத்தரகோசமங்கைக்குப் பிற்பகல் சென்றடைந்தோம். திருக்கோவையாரின் மிகுதியை இங்கே பூர்த்தி செய்தோம்.

இத்திருத்தலம் இராமநாதபுரத்துக்கு தென் மேற்கே சுமார் பதினைந்து கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இது ஒரு பழமை வாய்ந்த சிவத்தலமாகும். பக்தர்கள் கைலாயத்திற் கிணையாக இத்தலத்தை கொண்டாடுகின்றனர். அதனால் இத்திருத்தலம் தென் கைலாயம் என்னும் சிறப்பு பெயரையும் பெறுகிறது. இங்கேயுள்ள இறைவனின் பெயர் மங்களநாதர், இறைவியின் பெயர் பூண்முலை அம்மை, இத்தலத்திலுள்ள மரகத நடராஜர் சிவ வழிபாடு செய்யும் பக்தர்களுக்கு மகிழ்ச்சியான வாழ்வு பெற அருள்பாலிக்கிறார். இங்கேயுள்ள தீர்த்தம் அக்னி தீர்த்தம். முற்பிறப்பில் மாணிக்கவாசகர் தவமியற்றி அருள் பெற்ற தலம். மறுபிறப்பில் மாணிக்கவாசகராக சைவத்தைத் தழைத்தோங்கச் செய்வதற்கு வித்திட்டவர் உத்தரகோசமங்கைப் பெருமான் ஆவார்.

மிகப் பெரிய கோயிலான இக்கோயில் ஒழுங்காக நிர்வகிக்கப்படுகிறது. ஆறு காலப் பூசைகள் ஒழுங்காக நடைபெறுகிறது. ஆலயத்திற்குச் சிறப்புப் பொருந்திய அக்னி தீர்த்தமாகிய புண்ணிய தீர்த்தக்குளம் சிறப்பாக அமைந்துள்ளது. இவ்வாலயத்தில் சந்தனக் காப்பிட்டிருக்கும் மரகத நடராஜர் வருடத்திற் கொருமுறையே சந்தனக் காப்பிலிருந்து மார்கழி திருவாதிரையில் நீக்கபடுகின்றார். அச்சந்தனத்தைப் பெறுவதற்கு பல ஆயிரக்கணக்கான மக்கள் திருவாதிரை நாட்களில் போட்டி

---

நல்ல வழியில் வாழ ஆரம்பிக்கும் பொழுது கடவுளின் கருணை நம்மீது விழத்தொடங்கி விடும்.

போடுவார்கள். இராமநாதபுர சமஸ்தான தேவஸ்தானத்திற்குரிய இத்திருக் கோயிலுக்கு சேதுபதி மகராஜா குடும்பத்தினரே பரம்பரை அறங்காவலராவர். சமஸ்தான நிர்வாகத்தால் நியமிக்கப்பட்ட அதிகாரி கோயில் நிர்வாகத்தை கவனித்து வருகிறார். இக்கோயிலின் தல மரம் இலந்தை மரம்.

இறைவன் வேதாகமங்களின் இரகசியங்களை உமாதேவி யாருக்கு உபதேசித்ததால் இத்தலம் உத்தரகோசமங்கை எனப் பெயர் பெற்றது. இத்தலம் வேதவியாசர், காக புஜண்ட ரிசி, மிருகண்டு முனிவர், மயன், மாணிக்கவாசகர் ஆகியோரால் வழிபடப் பெற்ற தலமாகும். இராமேஸ்வரம், உத்தரகோசமங்கை ஆகிய இரு கோயில்களும் இலங்கை மன்னன் பாரக்கிரம பாகுவால் கட்டப்பட்டு திருப்பணிகள் செய்யப்பட்டது என்று ஆலய வரலாறுகள் கூறுகின்றன. திருக்கோவையார் முற்றோத லைப் பூர்த்தி செய்த பின்பு சிதம்பரத்தை நோக்கி பயணித்தோம். மறு நாள் 30.11.2013 சனிக்கிழமை அதிகாலை சிதம்பரத்தை வந்தடைந்தோம் சிதம்பரம் புண்ணிய நாச்சியார் மடத்தில் தங்கி இளைப்பாறிய பின் அன்று மாலை சிதம்பரத்தில் உள்ள சுவாமி ஞானப்பிரகாசர் குளம், சேக்கிழார் கோயில் ஆகியவற்றைத் தரிசிப்பதற்காகச் சென்றிருந்தோம்.

யாழ்ப்பாணம் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட சுவாமி ஞானப்பிரகாசர் போர்த்துக்கீசர் ஆட்சிக்காலத்தில் இந்தியா வந்து சிதம்பரத்தில் தங்கியிருந்த பொழுது மக்களின் நன்மை கருதி அவரால் இக்குளம் தோண்டப்பட்டது. நல்ல நீள, அகலமாக வடிவமைக்கப்பட்ட இக்குளம் பராபரிப்போர் இல்லாமல் மோசமான நிலையில் உள்ளது. குளத்திற்கு அண்மையில் அமைந்துள்ள சேக்கிழார் கோயில் நாவலர் பெருமானின் விருப்பப்படி அவரின் அபிமானிகளால் கட்டப்பெற்றது. சேக்கிழார் கோயிலில் மூலமூர்த்தியாக சேக்கிழாரும், பரிவார முர்த்திகளாக சுவாமி ஞானப்பிரகாசரும், நாவலர் பெருமானும் இடம் பெறுகின்றனர். இன்று இக்கோயில் ஒழுங்காக பராபரிக்கபடவில்லை. அருகில் சேக்கிழார் மணிமண்டபமும் இடம்பெறுகிறது. அம் மணிமண்டபம் ஒழுங்காக பராபரிக்கப்படுகிறது.

- தொடரும்

---

பிறரிடம் உள்ள குறைகளை பார்க்கும் தகுதி நமக்கு இல்லை.

# வாழ்வியலுடன் ஒன்றிய இறையுணர்வு

## நா.க. சிவராமலிங்கம்

ஆதிகாலம் தொட்டே மக்கள இறைவனிடம் இறுக்கமான பற்றுக் கொண்டிருந்தனர். இறை நினைப்பு அவர்களது இரத்தத்தில் ஊறிய ஒன்றாகவே இருந்தது. “அவனின்றி அணுவும் அசையாது” என்ற கொள்கையில் அவர்கள் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தனர். இயற்கையையே இறைவனாகக் கருதி வழிபட்டனர். அதனால் ஆன்மபலம் பெற்றனர். அல்லல் அகலப் பெற்றனர்.

“சரணாகமலாலயத்தை அரை நிமிட நேரம் மட்டில் தவமுறை தியானம் வைக்க அறியாத சடகசட மூடமட்டி” என்றார் அருணகிரியார். ஒரு நிமிட நேரமாவது இறை சிந்தனை கொண்டு அவனை சரணடைந்து அவனது தாமரை மலர்ப் பாதங்களை வணங்க அறியாதவர்கள் சடம், கசடு, மூடமட்டி என்று கூறியதிலிருந்து இறைவழிபாட்டின் இன்றியமையாமை வலியுறுத்தப்பட்டுள்ளது. எனவேதான் அறிவார்ந்த முன்னோர்களது எண்ணம், பேச்சு, செயல் எல்லாம் இறைவன் மாட்டு இருக்க வேண்டும் என்பதற்காகவேதான் தமது மக்கட் செல்வங்களுக்கு இறைவனுடைய பல்வேறு நாமங்களில் சிலவற்றைச் சூட்டி மகிழ்ந்தனர். பிச்சையாண்டி, கணேசன், சுப்பிரமணியன், பார்வதி, கருமாரி, இலட்சுமி, சரஸ்வதி அவற்றில் சிலவாகும். அத்துடன் தாம் வாழும் இருப்பிடத்திற்கு வீட்டிற்கும் அதன் உறுப்புக்களுக்கும் வழங்கிய பெயர்கள் மூலமும் இறை நினைப்பு ஏற்பட வழி செய்தனர்.

முதலில் குடியிருப்புக்கு வீடு என்று பெயரிட்டனர். வீடு என்றால் மோட்சம் அல்லது மாளா இறை இன்பத்தை குறிக்கும் ஒரு சொல்லாகும். வீட்டிற்கு நுழையும் வாயிலுக்கு படி அல்லது கல்லை அமைத்து கல் என்றும் படி என்றும் பெயரிட்டனர். கல் என்றால் படி. அத்துடன் படி என்றால் கல் என்றும் பொருள்படும். ஆகவே இறைவனை வணங்கி வீடுபேறு அடையக் கற்றுக் கொள் படி என்பது இதன் கருத்து ஆகும்.

---

*பாச நீக்கம் பெற்ற ஆன்மா இறை இன்பத்தில் நாட்டம் கொள்ளும்*

வீட்டின் வாசற் படியை அடுத்து வருவது நடை. ஆகவே படி. படித்தபடி நட என்றும் சுட்டும் முகத்தால் நடை என்று பெயரிட்டனர் போலும். வீட்டின் நுழைவாயிலின் முன் ஒரு சட்டம் அல்லது நிலையோடு சேர்த்து அமைத்தனர். அந்தச் சட்டம் நிலை எனப் பெயரிடப்பட்டது. படி படித்தபடி நட. அந்த நடை நிலையாக இருக்கட்டும் என்பதைச் சுட்டுவது.

ஆகவே படி, நட, படிப்பதால் வருவது நிலை இதன் முடிவாக கிடைப்பது வீடுபேறாகிய மோட்சமாகும். மோட்சமென்றால் வீடுபேறாகிய மோட்சமாகும். துன்ப துயரங்களிலிருந்து விடுதலை பெறுதலாகும்.

மற்றும் தம் எண்ணம் இறை நினைப்பில் இருக்கட்டும் என்பதற்காக இலக்கங்களின் முடிவில் "உ" என்ற முடிவு வரும்படியாக அமைத்தனர். உதாரணத்திற்கு ஒன்று, இரண்டு, மூன்று என்பதைக் கூறலாம். எண்கள் "உ"வில் முடிவதைக் காணலாம். "உ" என்பது இறைவனைக் குறிப்பதாகும்.

தாம் உண்ணும் வாழைப் பழங்களின் பெயரைக்கூட பூவன், மொந்தை (முகுந்தன்) பேயன் என்றழைத்தனர். பூவன் என்பது படைக்கும் கடவுளான பிரமனைக் குறிக்கும். முகுந்தன் என்பது காக்கும் கடவுளான. கடவுளான திருமாலைக் குறிக்கும். பேயன் என்பது பேயுடன் ஆடும் சிவனைக் குறிக்கும். உட்பொருள் வியக்கத்தக்கது.

இதிகாசம் என்றால் இப்படித்தான் வாழ வேண்டும் என்பது பொருள் பகவான் முதற்கே உலகு என்றார் வள்ளுவர். திருக்குறளில் கடவுள் வாழ்த்து, நீத்தார் பெருமை என்ற அதிகாரங்கள் இறை நினைப்பை ஏற்படுத்துவன. இறை சிந்தனை வாழ்க்கையை நெறிப்படுத்துகின்றது, தூய்மையாக்குகின்றது, வளப்படுத்துகின்றது. நிம்மதியை தருகின்றது. நிறைவைத் தருகின்றது அதுவே இன்ப அன்பு நிலையை ஏற்படுத்துகின்றது. இறைவனை அடைய இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று ஜீவகாருண்யம் அதாவது உயிர்களிடத்தில் அன்பு கொள்ளுதல் மற்றொன்று சத்விசாரம் அதாவது சத்பொருளான இறைவனை தேடிச் சிந்தித்து அதில் பற்று மிகக் கொண்டு அவனது பேரருளை விசாரித்து தெளிதல் என்பதாகும்.

---

நாம் வாழும் இந்த வாழ்க்கை முற்பிறவிகளில் செய்த வினையால் அமைந்தது.

எண் குணத்தானான இறைவனது தாளை வணங்காத தலையினால் பிரயோசனம் இல்லை "எண்குணத்தார் எண்ணாயிரவர் போலும் இடைமருது ஈசனார்" என்றார் நாவுக்கரசர் தன்வயத்தனால், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றுணர்வுடைமை இயற்கையாகவே பாசமின்மை பேரருளுடைமை முடிவில் ஆற்றலுடைமை, வரம்பிலா இன்பமுடைமை என்பன இறைவனின் எண் குணங்களாகும்.

இறைவன் ஈடு இணையற்ற பெருங்கருணை வள்ளல். அவனால் கிடைப்பது முடிவிலாப் பேரின்பம். அந்த இன்பத்துள் ஆழ்ந்தால் மாறில்லா மகிழ்ச்சியுள் திளைக்கலாம். இது வள்ளலார் பாடல்

எவ்வுலகும் எவ்வுயிரும் எப்பொருளும் உடைய
எல்லாம் செய் வல்லதாகி
இயற்கையே உண்மையாய் இயற்கையே அறிவாய்
இயற்கையே இன்பமாகி
அவ்வையின் அனாதியே பாசமிலதாய் சுத்த
அருளாகி அருள் வெளியிலே
அருள் நெறி விளங்கவே அருள் நடம் செய்தருள்
அருட் பெரும் ஜோதி ஆகிக்
கவ்வையறு தனிமுதற் கடவுளாய் ஓங்குமெய்க்
காட்சியே கருணை நிறைவே
கண்ணே என் அன்பிற் கலந்தெனை வளர்க்கின்ற
கதியே கனிந்த கனியே
வெவ்வினை தவிர்த்தொரு விளக்கேற்றி என்னுளே
வீற்றிருக்கும் அரசே!
மெஞ்ஞான நிலைநின்ற விஞ்ஞானகலர் உளே
மேவு நடராச பதியே!

---

ஆணவத்தை ஒழிப்பதுதான் பக்தி செய்வதன் முக்கிய நோக்கம் தன்னை எளியவன் என்று எண்ணி ஆணவத்தை நீக்கி அன்பினால் தன்னை வழிபடும் ஆன்மாவை இறைவன் தேடிச் செல்கிறார்.

ஏழைகளுக்கு உதவும் பணக்காரன் நீண்ட நன்மை தேடியவன் ஆகின்றான்

# ஓட்டைப்பானை

**(திருவருட் கட்டுரை)**

பகுதி 3

பசுந்தீவு கோவிந்தன்

ஓட்டைப் பானையாய் இருந்துகொண்டு எத்தனை வருடங்கள் தேடினாலும், எத்தனை பிறப்புக்கள் தேடினாலும் எங்கெல்லாம் சென்று தேடினாலும் இறையருள் கிடைக்கப் போவதில்லை. காசிக்குச் சென்றும் பிரயோசனம் இல்லை, அன்றிச் சமயம் மாறியும் பிரயோசனம் ஏற்படப்போவதில்லை, தலைகீழாய் நின்று வணங்கியும் பிரயோசனம் ஏற்படப்போவதில்லை. உனது ஊரிலுள்ள கோயிலிலேயே இறைவன் அருள் பொழிந்து கொண்டிருக்கிறான். ஓட்டைப் பானையாய் இருக்கும் வரை அதைத்தானும் உன்னால் ஏந்திக்கொள்ள முடிவதில்லை. அதே ஓட்டைப் பானையாய் இருந்துகொண்டு எங்கு சென்றாலும் இறையருளைப் பெற முடியாது. நாம் ஓட்டைப் பானைகளாய் இருக்கும் வரை எங்கு சென்றாலும் இறையருள் எம்முள் தங்காது எனும் உண்மையை எல்லோரும் உணர்ந்து செயற்படும் வரைக்கும் மனித குலத்துக்கு விமோசனம் கிடைக்கப்போவதில்லை. வீணே அலைந்து திரிந்து காலத்தையும் பொருளையும் வீண்விரயம் ஆக்குவதே மிச்சமாகும்.

மனிதனுக்கு மட்டுந்தான் ஆறாவது அறிவு உண்டென்பதை நாம் எல்லோரும் அறிவோம். ஐந்தறிவுக்கு ஐம்புலன்கள் தளமாய் இருப்பது போன்று ஆறாவது அறிவுக்குத் தளமாய் இருப்பது மனம் ஆகும். மனம் நல்ல மனமாய் இருக்கும் வரைதான் ஆறாம் அறிவு நல்லறிவாக இருக்க முடியும். மனம் தீயமனமாய் இருக்கும் வரை ஆறாம் அறிவு தீய அறிவாய் அமையும். தீய அறிவு தீய விளைவுகளையே ஏற்படுத்தும். ஆறாம் அறிவு கத்தி போன்றது. கத்தியின் நல்ல பயன்பாடு பலப்பல ஆகும். ஆனால் அதே கத்தியால் கொலையும் செய்யலாம். கத்தி நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்தப்படுவதும் தீய காரியங்களுக்குப் பயன்படுத்தப்படுவதும் பயன்படுத்துபவனைப் பொறுத்தது. அது போன்று ஆறாம் அறிவை நல்ல

காரியத்துக்குப் பயன்படுத்துவதும் தீய காரியத்திற்குப் பயன்படுத்துவதும் அதைப் பயன்படுத்தும் மனதைப் பொறுத்தது. எனவே மனிதனுக்குள்ள ஆறாம் அறிவு நல்லனவற்றை மட்டும் செய்யும் என்று எண்ணப்படாது. பிரச்சனைகள் உருவாகுவதும் தீமைகள்விளைவதும் இந்த ஆறாம் அறிவினாற்தான் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். நான் முன்பு கூறிய அசுர குணங்களை வளர்த்து தீய செயல்களைச் செய்விப்பது ஆறாம் அறிவே ஆகும். எனவே ஆறாம் அறிவு நல்லறிவாய் அமைவதற்கு அதன் தளமாகிய மனதை நற்பயிற்சிக்கு உட்படுத்தி, பக்குவப்படுத்தி வைத்திருக்க வேண்டும். தவறின் எம்மைப் பாவக்கடலில் கொண்டுபோய் இறக்கிவிடும். மனதை நல்லவழியில் பயிற்றுவித்துப் பக்குவப்படுத்துவதற்கு இடைவிடாத நற்பயிற்சிதான் ஒரே வழியாகும். அதற்கு இறை சிந்தனை அவசியமாகும். இறை சிந்தனையின் துணை கொண்டு மனதை நல்வழியில் ஒருமுகப்படுத்தி ஓட்டைகளை அடைக்க முயற்சிக்கவேண்டும். மேலும் ஓட்டைகள் ஏற்படாதபடிக்கு எம்மைப் பாதுகாப்பதும் அவசியமாகும்.

கோயிலுக்குச் செல்பவர்கள் எல்லோரும் உண்மையான பக்தர்கள் அல்லர். கோயில்களில் தொண்டு செய்வோர் எல்லோரும் உண்மையான தொண்டர்கள் அல்லர். கோயில்களில் பூசை செய்யும் பூசகர்கள் எல்லோரும் உண்மையான பூசகர்கள் அல்லர். கோயில்களை நிர்வகிக்கும் நிர்வாகிகள் எல்லோரும் உண்மையான நிர்வாகிகள் அல்லர். உண்மை என்பது சத்தியம், அது அழிவற்றது, அது நிரந்தரமானது, பிரமத்தின் வடிவமானது. மனிதனாய்ப் பிறந்த எல்லோரிடமும் ஓட்டைகள் உண்டு. அவற்றை அடைப்பதும் மேற்கொண்டு ஓட்டைகள் ஏற்படாது பார்த்துக்கொள்வதும் இறையருளை வேண்டி நிற்கும் ஒவ்வொருவருடைய கடமையாகும், அதாவது கட்டாயமாகும். அப்பொழுதுதான் இறைவன் பொழிந்துகொண்டிருக்கும் அருளால் உங்களை நிரப்பிக்கொள்ள முடியும். இறைவன் அருள் மழையை இடைவிடாது பொழிந்து கொண்டே இருக்கிறான். அதை அவன் ஒருபோதும் நிறுத்துவதில்லை. அதை உங்களால் புரிந்துகொள்ள முடிவதில்லை என்றால் அதற்குக் காரணம் உங்களுடைய அறியாமையாகும். (தொடரும்)

ஓம் நமசிவாய

# இந்து சமய பேரவையின் குருபோன்ற திருமுறைச் செல்வர் சிவ முத்துலிங்கம் அவர்களின் அறுபத்து மூன்றாவது பிறந்த நாள் வாழ்த்து

திருவருளும் குருவருளும் செழித்தே நிற்க
இந்து சமய பேரவையின் செயலாளராக
கடமையே கண்ணென கருத்தில் பதித்து – ஈர்பத்து ஆண்டு
நிறை விழா நேர் நின்று நிகரின்றி நடத்தி
உளம் துலங்கி அருள் ஓங்க – மூவைந்து ஆண்டு
திருமுறைபூர்த்தி பேரவையின் முத்தான மணிமகுடமாக்கிய
திருமுறைச் செல்வரே நீவீர் வாழி! வாழி!


நல்வினையால் நாம் இணைந்தோம் இந்து சமய பேரவையில்
நல் அருளால் நாம் அமைத்தோம் ஆத்ம ஜோதி இல்லம்
இல்லமதில் குருபோன்று தெம்புடனே துணிவூட்டி
செம் பொன் மலரெடுத்து சிவனாரை பூசை செய்து
'சிவாய நம' 'ஓம் நமசிவாய' எனும் சிவநாம சிந்தையுடன்
தெய்வீக நல் ஆன்மீக துறையில் எமை பீடு பெற
நடக்க வைத்த பெருமை, தகமை, அருமைதனை
இன்றும் நாம் எண்ணி எண்ணி அகம் குழைந்தோம்
அகம் மகிழ்ந்தோம், ஆத்மீக அறிவு பெற்றோம் – எமை
திகழ் சைவ நெறி வாழ வைத்தீர் நீவீர் வாழி! வாழி!

நினைவெல்லாம் இந்து சமய பேரவைக்காய்
முழுநேர ஆன்மீக தொண்டராய்
அமைதியே உருவாய் அரும்பணி – ஆற்றும் நீவீர்
எழிலுறும் ஆன்மபலத்துடன் அருளும் சீர்க்க
என்றென்றும் அன்புடனே அறமும் ஓங்க
உடல்நலனும் உளவளமும் பெற்றே நாளும்
பல்லாண்டு பல்லாண்டு காலம் வாழ்ந்து
என்றும்தான் சைவத் தமிழ் தொண்டு பேண
சிவனருளால் வாழ்த்துகின்ற வாழ்த்தால்
வாழி! வாழி! வாழியவே!

திருமதி கமலாதேவி மகாலிங்கம்
இந்து சமய பேரவை
திருக்கூட்ட அடியார்கள் சார்பில்

## கோவை தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகள் சர்வதேச தர்ம பரிபாலன அறக்கட்டளைக்கு வாரி வழங்குங்கள்

**ஆதீன விலாசம்:**



கோவை தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகள்
இராமலிங்க வள்ளலார் சர்வதேச தரும பரிபாலன அறக்கட்டளை
மேட்டுக்குப்பம் 807802 (நெய்வேலி வழி கடலூர் மாவட்டம்
ஆதீனத் தொலைபேசி இலக்கம்: 04142-645484
கைத்தொலைபேசி இலக்கம்: 9443359245

அனாதரவான சிறார்களையும், ஆதரவற்ற முதியோர்களையும் பராபரிக்கும் தர்ம ஸ்தாபனமான நிறுவனத்திற்கு நன்கொடை அளித்து உதவி செய்யுங்கள்.

நடக்கமுடியாத நிலையில் படுக்கையில் படுத்தபடி நிறுவனத்தைப் பரிபாலிக்கும் மகா ஞானியான கோவை தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகளின் தன்னிகரில்லா தன்நலம் அற்ற சேவைக்கு நிதி உதவி செய்து சுவாமிகளின் சுமையை குறைத்து அருளாசிகளைக் பெறுவீர்களாக!

# முருகன் புத்தகசாலை



இலங்கை, இந்தியாவில் இருந்து நேரடியாக புத்தகங்கள், பத்திரிகைகள் இறக்'தமதி செய்து விற்பனை செய்கிறோம்

அதிவேக துரித பணமாற்றுச் சேவை

**GTA MALL, 5215 Finch Ave. E., Unit #125**

**TEL: 416-321-0285**

# இந்து சமயப் பேரவைச் செய்திகள்

## நவராத்திரி வழிபாடு



நவராத்திரி வழிபாடு 24-09-2014 புதன்கிழமை தொடக்கம் மாலை 4:00 மணி முதல் 7:00 மணிவரை சிறப்பாக நடைபெற்றது. அபிராமி அந்தாதி, அபிராமிப் பதிகம், சரஸ்வதி அந்தாதி, இலக்குமி தோத்திரம் திருமுறைகள் ஆகியன தினமும் ஓதப்பெற்று 3-10-2014 விஜயதசமி அன்று சிறப்பான பூசை வழிபாடுகளுடன் நிறைவு பெற்றது.

## இந்துசமயப் பேரவையின் 20 ஆவது ஆண்டு நிறைவு விழா

இந்து சமயப் பேரவையின் 20 ஆவது ஆண்டு நிறைவு விழா Brimley / Ellesmere அருகில் அமைந்துள்ள சந்நிதி முருகன் ஆலயத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. பேரவையின் தலைவர்



சைவதுரந்தரர் வி. கந்தவனம் அவர்கள் தலைமைதாங்கினார்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ், முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் பிரதம விருந்தினராக பங்குபற்றி சிறப்பித்தனர். சைவ சித்தாந்த மன்றத்தலைவர் திரு. தி. விசுவலிங்கம் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். சிவஸ்ரீ லிங்க சுரேஸ்குருக்கள், சிவத்திரு புவனேந்திரன் ஐயர் ஆகியோர் ஆசியுரை வழங்கினர்.

பேரவையின் தாபகர் ஆத்மீக வள்ளல் திரு. நா. முத்தையா அவர்கள் எழுதிய திருமுறைக் கதைகள் என்ற நூல் மறுவெளியீடு செய்யப்பெற்றது. பேரவையின் நிர்வாகசபை உறுப்பினர் ஆசிரியர் சு. சிவதாஸ் அவர்கள் நூலை வெளியிட்டு வைத்தார்.

பேரவையின் 20 ஆவது ஆண்டு நிறைவு விழா மலரை பொருளாளர் செ. சோமசுந்தரம் அவர்கள் வெளியிட்டு வைத்தார்.

கனடா தமிழ்க் கவிஞர் கழகம் கனடாவில் ஆன்மீகம் வளருகின்றதா? தளருகின்றதா? என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடத்தினர். பட்டிமன்றத்திற்கு பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமை வகித்தார். இ. ருக்மணிகாந்தன் குழுவினரின் பக்திப்பாடல்களும் இடம்பெற்றது. பேரவையின் செயலாளர் சிவ முத்துலிங்கம் ஆத்மீக வள்ளல் அவர்கள் இந்துசமயப் பேலவையை அமைத்த நோக்கங்களைப்பற்றி சிறப்புரையாற்றினார்.



பேச்சுப் போட்டியில் பங்கு பற்றிய சிறார்களுக்கும் வெற்றி பெற்ற சிறார்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பெற்றன.

மொன்றியல் ஆத்மஜோதி கல்வி இணைய ஆசிரியர் திரு. சி. உதயகுமார் பேரவையினரால் கௌரவிக்கபபெற்றார். அவருக்கு


சைவதுரந்தரர் வி. கந்தவனம் ஆத்ம ஆசிரியர் என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்புச் செய்தார்.

**நடேசர் அபிசேகம்**



நடேசர் அபிசேகம் 6-10-2014 திங்கட்கிழமை வெகு சிறப்பாக நடைபெற்றது. திருவாசகம் முற்றோதலுடன் சிவகாமி அம்பாள் சமேத நடராசப் பெருமானுக்கு அபிசேக ஆராதனைகள் வெகு சிறப்பாக நடைபெற்றது.

**சுப்பிரமுனிய சுவாமிகளின் குருபூசை**



காவாய் ஆதீனதாபகர் சுப்பிரமுனிய சுவாமிகளின் வருடாந்தக் குருபூசை 23-10-2014 வியாழக்கிழமை காலை 9:00மணியில் இருந்து மாலை வரை நடைபெற்றது. சிவயோக சுவாமிகளின் நற்சிந்தனை, திருமுறைகள், கந்தரனுபூதி, கந்தலரங்காரம் போன்ற பாடல்கள் ஓதப்பெற்றன. நண்பகல் சிவபூசையும் சுவாமிகளின் திருவுருவப் படத்திற்கு திருவடி வணக்கமும் செலுத்தப் பெற்றது.

**கந்த சஷ்டி விரத வழிபாடு**



கந்த சஷ்டி விரத வழிபாடு 25-10-2014 தொடக்கம் 2-11-2014 வரை சிறப்பாக தினமும் நடைபெற்றது. கந்தரனுபூதி கந்தரலங்காரம், சண்முக கவசம், திருமுருகாற்றுப்படை, கந்தர் கலி வெண்பா, தெய்வமணி மாலை, திருப்புகழ் போன்ற பாடல்கள் ஓதப்பெற்றன. வேல்ப்பெருமானுக்கு அபிசேக ஆராதனைகளும் பக்தி பூர்வமாக நடைபெற்றது.

இலண்டன் சைவ முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. இ. இராமநாதன் வருகை

4-11-2014 செவ்வாய்க்கிழமை காலை இலண்டன் சைவ முன்னேற்றக் கழகத் தலைவர் இ. இராமநாதன் அவர்கள் ஆத்மஜோதி

இல்லத்திற்கு வருகைதந்தார். அன்றையதினம் பிரதோசத்தை முன்னிட்டு திருவாசகம் முற்றோதல் நடைபெற்றது.




நண்பகல் சிவபூசையும் விசேட வழிபாடுகளும் நடைபெற்றது. பெரியார் இராமநாதன் அவர்கள் இந்து சமயப் பேரவை சார்பில் கௌரவிக்கப்பெற்றார்.

**கிருபானந்த வாரியார் குருபூசை**



14-11-2014 வெள்ளிக்கிழமை கிருபானந்த வாரியார் குருபூசை வெகு சிறப்பாக நடைபெற்றது. திருமுறைகள், கந்தரனுபூதி, கந்தர் அலங்காரம், திருப்புகழ் போன்ற பாடல்கள் பக்தி சிரத்தையுடன் ஓதப்பெற்றன. மாலை 3:00 மணிக்கு நிறைவு பெற்றது. வாரியார் சுவாமிகளின் திருவுருவப் படத்திற்கு திருவடி வணக்கமும் செலுத்தப்பெற்றது.

**செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் அவர்களின் கனடா வருகை**



செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் அவர்கள் கனடாவிற்கு வருகைதந்து 20க்கு மேற்பட்ட நிகழ்ச்சிகளில் பங்கு பற்றி சமயச் சொற்பொழிவாற்றினார். 15-11-2014 சனிக்கிழமை ஆத்மஜோதி இல்லத்திற்கு வருகைதந்து நாவலர் பெருமானைப் பற்றியும், பேரவையின் தாபகர் ஆத்மீகவள்ளல் நா. முத்தையா சுவாமிகளைப் பற்றியும் விரிவான சொற்பொழிவாற்றியிருந்தார். சிவபூமி நிறுவனத்திற்கு 250 டொலர் பணமும் கையளிக்கபபெற்றது.

29-11-2014 சனிக்கிழமை மாலை 5:30 மணியளவில் கனடா கந்தசுவாமி கோயில் ஆலய மண்டபத்தில் இந்து சமயப் பேரவை சிவபூமி ஆதரவு சொற்பொழிவு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. பெரிய புராண நாயன்மார்களின் தரும வாழ்வு பற்றி விரிவான சொற்பொழிவை செஞ்சொற் செல்வர் ஆற்றியிருந்தார். அவர் தலைவராக இருந்து இயங்கும் சிவபூமி நிறுவனத்திற்கு 3100 டொலர் பணம் சேர்த்து அவரிடம் பேரவையின் சார்பில் கையளிக்கப்பெற்றது.





## ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை

திருமுறைச்செல்வர் சிவ. முத்துலிங்கம்

அமைதி என்பது ஒரு தெய்வீக பண்பாகும். அது ஆன்மீகத்தின் உயரிய தன்மையாகும்

- இவ்வுலகில் அனைவரும் அமைதியை நாடிநிற்கின்றனர். அதைத் தேடி அங்கும் இங்கும் ஓடுகின்றனர். அமைதியைக் காணோமே என்று கதறுகின்றனர். ஆனால் அமைதி என்பது எளிதிலே வந்து விடுவதில்லை.

- மிருக இயல்பாக உள்ள மனிதனின் இதயத்தில் நாம் அமைதியைக் காண முடியாது.

- அமைச்சர்கள், வழக்கறிஞர்கள், வியாபாரிகள், சர்வாதிகாரி கள் ஆகியோரின் இதயங்களில் அமைதி நிலவமுடியாது.

- யோகிகள், துறவிகள், மகான்கள், ஆத்மீக உயர்வு பெற்ற மனிதரின் உள்ளங்களில் அமைதி நிலவுகிறது.

- ஐம்புலன்களையும் மனதையும் கட்டுப்படுத்திய ஆசையற்ற மனிதனின் உள்ளத்தில் அமைதி நிலவுகிறது.

- பேராசை, காமவெறி, பொறாமை, கோபம், கர்வம், ஆணவம் ஆகிய துர்க் குணங்கள் அமைதியின் விரோதிகள்.

- புறப் பொருட்களில் அமைதி நிலவுவதில்லை. அது அகத்தேயுள்ள ஆத்மாவில் நிலவுகிறது.

- பணத்தினால் அமைதியைப் பெறமுடியாது. பல பொருட்களை விலைக்கு வாங்கலாம். ஆனால் அமைதியை விலைக்கு வாங்க முடியாது.

- மன அமைதியை உங்களைத் தவிர வேறு எதனாலும் கொண்டுவர முடியாது.

* உங்களது கீழ் மனம் புலன்கள், ஆசைகள் இவைகளை அடக்கி வெற்றி கொள்வது மூலம் உள்ளத்தில் அமைதியை நிலை நிறுத்த முடியும்.

* தங்களை உயர்த்திக் கொண்டவர்களினால் பிறரை உயர் நிலைக்கு கொண்டுவர முடியும்.

* தன்னை அறிந்த ஒரு துறவியால்தான் உலக அமைதியை ஏற்படுத்த முடியும்.

* ஒவ்வொருவரும் தங்கள் இளம் வயதில் இருந்தே இறை வழிபாட்டை இடைவிடாது செய்து ஆன்மீக உணர்வை வளர்த்துக் கொள்ள வேண்டும். இப்படியான செயற்பாடுகள் தெய்வீக நிலைக்கு உயர்த்தும்.

* நீ இறை நாமத்தை இடைவிடாது திரும்ப திரும்பச் சொல்லி வந்தால் பகவானது திருவடி நிழலை அடையலாம்.

* இறைநாமம் மனிதனை தெய்வீக நிலைக்கு உயர்த்துகிறது.

* பகவானது ஒவ்வொரு நாமமும் எல்லையற்ற சக்தி வாய்ந்தது.

* இடைவிடாத நாம ஜெபம் மனிதனை தெய்வத் தன்மை வாய்ந்தவனாக மாற்றி அமைக்கின்றது.

* தினமும் அறநூல்களை படித்து அவற்றின் கருத்துக்களை குறித்து சிந்திக்கும் பழக்கத்தை மேற்கொள்ளுங்கள்.

* இறை உணர்வையும் இடைவிடாத இறை பிரார்த்தனையையும் வளர்த்துக் கொண்டால் உள்ளத்தில் அளவற்ற ஆனந்தமும் அமைதியும் தவழும்.

* மனப் போராட்டம் ஏற்படும் போது அல்லது மனம் சஞ்சலம் அடையும் போது ஒரு நிமிடம் தியானம் இருந்தால்க் கூட மனச்சாந்தி கிடைக்கும்.

# AR Legal Services

- Small Claims Court
- Workplace Safety and Insurance Board Workplace Safety and Insurance Tribunal
- Human Rights Tribunal of Ontario
- Service Canada - CPP
- Social Security Tribunal
- Parole Board Of Canada
- Financial Services Commission Of Ontario
- Ontario Labour Relations Board
- Landlord And Tenant Board
- Criminal Charges
- Driving while Disqualified
- Dangerous Driving
- Fail to Remain
- Possession of Marijuana
- Theft Under 5000 and
- Shoplifting

- *Provincial Offences*
- *Commissioner of Oaths*
- *Small Claims Court*
- *Traffic Tickets*
- *Criminal Charges*

- Traffic Tickets
- Careless Driving Tickets
- Stop Signs
- Red Light Tickets/Camara
- Turns Traffic Tickets
- Fail To Remain
- Fail To Report Accident
- Stunt Driving Tickets
- Suspended Driving Charges
- No insurance
- Demerit Point

உங்கள் அனைத்து சட்டத்
தேவைகளுக்கும் தரமான நம்பிக்கையான
ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்

scan me

**Risha Ananthamoorthy**
Tel: 416-299-6394
Fax: 416-297-6107



100 Consilium Place ,Suite 200,Toronto ON M1H 3E3

Trillium Mortgage

# Mortgage தேவைகளுக்கு அழையுங்கள்

**Thulasitharan Muthu**
(Thulasi)
Mortgage Agent

**Direct: 416-666-6703**

E-MAIL: thulasi17@hotmail.com

200 Consumers Road, Suite 301
Toronto, ON. M2J 4R4
Broker Licence # 11396

# விவேகா அச்சகம்

VIVEKA Printers

பலவர்ண அச்சு வேலைகளை
மிகக்குறைந்த
விலையில் தரமாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

Book Publishing, Printing, Binding
Graphic Designs, Web Designs, Digital Colour Copies,
Digital Black & White Copies

1911 KENNEDY ROAD, UNIT 109-110
TEL: 416-269-1994
416-807-7468